# திராவிட நாடு

6—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## ஆற்றலைப் படைமின்!

[ ப. இராமசாமி ]

இனியசெந் தமிழும் இங்கிதத் தெலுங்கும்
தேனூறுங் கன்னடமும் தேர்ந்தமலை யாளமும்
விளங்கும் நான்குமா நிலமுடைத் திருவிடமே!
தொல்புகழ் வரலாறு சொந்தமாய்ப் படைத்தநாம்
உணவினில் உடையினில் உயர்ந்த பண்பால்
ஒன்றிய இனமாகி வென்றிடும் கலைபேணும்
வீசுபுகழ் கொண்ட வீரர்தம் கோட்டமே!
இரும்பும் தங்கமும் இயக்குநல் நிலக்கரியும்
காவிரிமன் வெள்ளொடும் கனிப்பொருள் பலவும்
தேக்கொடு ஆறிலும் தென்பாண்டி முத்தும்
சீர்தா விளையும் பார்புகழ் மணிநாடே!
அத்தனை வளமும் இத்தனை தழுவிட
இருந்தும் என்னே? வாழ்வையோ கண்டோம்
அன்னியர் வடவர் ஆள்வதால் நமதரும்
நலமெலாம் இழந்தோம்; நாடற்றோம்; நலிவுற்றோம்.
ஏமாந்த தென்னகமே! இன்னுமா உணர்விலே?
வென்றவர் மரபே! வேற்றவர் பிடியற—
விடுதலைத் திராவிடம் விரைவிலே மலர்ந்திட
அன்றுடம் உழைப்பின்! ஆற்றலைப் படைமின்!!

# நாதியற்றேன்!

[கா. வேழவேந்தன்]

பொறுமைக்காரன் கதிரவன் பாரால் அணைத்துவிட்டுச்சென்ற பின் மீன் விளக்குகள் கேட்பா ற்று எங்கெங்கோ சிதறிக்கிடந் தன. அவனைப் பின்தொடர்ந்து வந்த நிலவோன் உழைப்பைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொன் றின் அருகிலும் சென்று ஒளி யேற்றிவிட்டு வான்வெளியில் தன் னந் தனியே நடந்து கொண்டுருந் தான்.

அந்த வீட்டில் கும்மிருட்டு இன்னும் சூழ்ந்து கிடந்தது. தூரத்திலிருந்து பார்ப்பவர் களுக்கு யாரோ செல்வந்தர்கள் வாழும் வீடுபோலத் தோன்றும். ஏன்? நேற்றைக்கு முந்தியநாள் வரை அந்த வீட்டிலே வாழ்ந்தவர் கள் செல்வாக்கும் சிறப்பும் பெற்ற வராகத்தான் இருந்தார்கள்.

ஆனால் இன்று.........?

நிலைமை அடியோடு மாறிவிட் டது. கொள்ளைக்காரன் கால தேவன் அந்த இல்லத்தைத் தாங்கிவந்த முதுகெலும்பு போன்றவர்களையெல்லாம் சுருட் டிக்கொண்டு போய்விட்டான். இப்பொழுது அங்கே நான்கைந்து கன்னிப் பெண்கள்தான் இருந் தார்கள். அனாதைகளாக, ஆதர வற்றவர்களாக ஆகிவிட்டோமே என்று எந்த நேரமும் அவர்கள் அவலக் குரலை எழுப்பிக் கொண்டே இருந்தார்கள். தூக்கி நிறுத்தி உயரவைக்கும் கொழு கொம்புகளை இழந்த அந்தப் பூங் கொடிகளுக்கு எதிர்காலமே பீதி நிறைந்ததாகத் தென்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் அடுத்த ஊரிலிருந்து இரண்டொரு ஆண் மக்கள் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இளகிய நெஞ்சை மூலதனமாகக் கொண்ட அந்த இள மங்கையர் வந்தவர்களை 'வாருங்கள்' என்று மனமுவந்து வரவேற்றார்கள். கரவா உள்ளம் படைத்த அந்தக் கன்னியரை ஏமாற்ற, கள்ள உள்ளம் படைத்த அந்த ஆண்களுக்கு எப்படியோ துணிவு பிறந்தது. "உங்களை மணந்து கொள்கிறோம்" என்றார் கள் நாவினில் தேனைச்சேர்த்து! அந்தப் பேதைப் பெண்களும் முழுக்க முழுக்க நம்பிவிட்டார்கள்.

இளையவள் ஒருத்தியைத் தவிர ஏனையவர்களுக்குத் திருமணம் நடந்து முடிந்தது. ஆனால் வந்த வர்களின் உண்மை உரு கொஞ்ச நாட்களுக்குள் அந்தப் பெண்க ளுக்குப் புரிந்துவிட்டது. அன் பால், ஆதரிக்கும் பண்பால் அல்ல அவர்கள் தங்களை மணந்து கொண்டது, தங்களிடமுள்ள செல்வத்திற்காகவே என்பதை அவர்களுக்கு அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் உணர்த்தா மல் உணர்த்திவிட்டன. பாவம்! அந்த அபலைப் பெண்களால் விழி நீர் பெருக்குவதைத் தவிர வேறு வழிகாண இயலவில்லை.

எல்லோருக்கும் இளையவள் இவற்றையெல்லாம் கண்டாள். "சகோதரிகளே! எனக்கு இந்த வீட்டு வாழ்வே பிடிக்கவில்லை; என்னை விட்டுவிடுங்கள். நான் அயலூர்போய் ஒரு நல்லவனைக் கைப்பிடித்து எப்படியேனும் பிழைத்துக்கொள்ளுகிறேன்" என் றாள். தங்கள் வாழ்வைச்சீர்குலைத் துக்கொண்ட அந்தச் சகோதரி கள் தங்கையின் நலனுக்கும் தடையாக நிற்க விரும்பவில்லை; அனுப்பிவைத்தார்கள்.

அயலூரை அடைந்தாள் அந்த மணமாகா மங்கை. அந்த ஊர் ஆண்மகன் ஒருவன் அவளை ஆர் வத்துடன் வரவேற்றான். திறமை யும் அழகும் ஒருங்கே அமைந்த அந்தச் சேல்விழியாளுக்கு சீரும் சிறப்பும் அளிப்பதாக உறுதி தந்தான். அந்தப் பூவை உள்ள மெல்லாம் பூரித்துப் போனாள். இல்லத்தரசியாகிவிட்ட அவள் அவனுடைய குடும்பம் ஏற்றம் பெற இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்தாள். உழைப்பு என்றைக்கு வீணாயிற்று? அவன் குடும்பம் வளர்ந்தது; செழித்தது.

ஆனால் எண்ணமெல்லாம் ஈடேறிவிட்டால்...?

கொஞ்ச நாட்களுக்குள் யாரோ அந்தக் குடும்பத் தலைவனுக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் அவன் நெஞ்சத்தில் நஞ்சைக் கலந்தார் கள். குறையா அன்பு காட்டுவ தாக ஆணையிட்டுக் கூறிய அந் தக் கணவன் கோணல் புத்திக் காரனாக மாறிவிட்டான்.

முடிவு...?

நேற்றுவரை தித்திக்கும் தேனாகக் காட்சிதந்த அந்த நீள்விழி யாள் நஞ்சாக ஒதுக்கப்பட்டாள். அவள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு தீராத தொல்லைகளை அடுக்கடுக்காகத் தந்தான் அவன். கடைசியில் அந்த மனி தத் தன்மையற்றவன் தான் கட் டிய தாலியையே அவள் கழுத்தி லிருந்து அறுத்துக்கொண்டான். "உதவாக்கரையே! ஓடிப்போ!" என்று விலங்கென விரட்டினான்.

நாதியே இல்லாத அந்த நங்கை யால் என்ன செய்யமுடியும்? புழு வாகத் துடிக்கிறாள்; புலம்பிப் புலம்பி அழுகிறாள். கட்டிய கண வனை விட்டுப் பிரியவும் இயல வில்லை; பிறந்த வீட்டைத் தேடிச் செல்லவும் வெட்கம் பிய்த்துத் தின்கிறது. அந்தப் பேதைப் பெண்ணுக்கு ஆறுதல் அளிப் பவர்யார்? நிலைகெட்டுத் தவிக்கும் அந்த நேரிழையாளுக்கு நீதி வழங்குபவர் யார்?

இன்றைய சூழ்நிலையில் அந்தப் பரிதாபத்திற்குரிய மங்கையாகத் தான் இலங்கைத் தமிழன் நம் கண் முன்னே நிற்கிறான்!

★

# கோயிலில் நுழைய....!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [6—7—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 51

ஆண்டியப்பன், எனும் பெயருடைய அந்த இளைஞர், மேல்படிப்புக்கு முயன்றார்! இ. எஸ். எல். சி. யில் தேர்ச்சிபெற்ற அவர், இன்னும் மேலே படிக்கலாம் எனும் ஆசையில், உற்றாரையும் உறவினரையும் நாடினார். உதவி, குதிரைக் கொம்பாயிற்று. ஆசையோ, படிக்கத் தூண்டுகிறது! வறுமையோ, தாழ்ப்பாள் போடுகிறது!! நெஞ்சொடிந்த அவர், கடந்த ஜூன் 30ந் தேதியன்று, ஓடும் இரயிலில் படுத்து உயிரைவிட்டார்—அவரது சொந்த ஊர், மதுரை மாவட்டத்திலுள்ள சில்குவார்பட்டி என்று, செய்தியொன்று சொல்கிறது.

"அதிகக் கல்விகற்க விரும்பிய நான் ஏமாற்றமடைந்தேன். இதனால், சாக முடிவுசெய்தேன். இதற்கு எவரும் பொறுப்பு இல்லை," என்று அந்த இளமலர், எழுதிவைத்திருந்ததாம், கடிதம்.

அமைச்சர்களும் அவர்தம் தலைவரும், தமிழ்நாடெங்கும் சென்று, சொல்கிறார்களாம் — சுதந்திர சர்க்காரில் என்ன கிடைக்கவில்லை, என்று! தோள் தட்டி, வாதுக்கு இழுக்கிறார்களாம் எதிர்க்கட்சிகளை!! இதோ, நாடு, எப்படியிருக்கிறது என்பதற்கு சேதி வருகிறது—சாகிறார், ஒரு இளைஞர்! படிக்க வசதியின்றி, ஓடும் இரயிலை நாடியிருக்கிறார்!!

*

கல்லூரிகளும், பள்ளிகளும் திறக்கப்பட்டு விட்டன. கைகளிலே, 'நற்சான்று'களை வைத்துக் கொண்டு, மாணவரும் அவர்தம் பெற்றோரும், வலம் வரும் காட்சிகளை ஆங்காங்கும் காண்கிறோம். தொழிற் கல்லூரிகளில் சேர்வதென்றால் சிரமம் என்றொரு கட்டமிருந்தது—பிறகு எந்தக் கல்லூரியானாலும் சேருவது கடினம் எனும் நிலைமை வந்தது—இப்போது கல்லூரிகளில் மட்டுமல்ல, பள்ளிகளிலே சேர்வதென்றால்கூட சாமான்யமல்ல என்கிற சூழ்நிலை உருவாகியுள்ளது.

"படித்தோர் எண்ணிக்கை நூற்றுக்கு 15கூட இல்லை", என்று இந்திய உபகண்டத்தைப்பற்றிச் சொல்வார்கள். இங்குதான், கல்வியிலாமை அதிகம் என்கிற பல்லவி, மிகமிகப் பழையதாகும். "படித்து என்னசெய்யப் போகிறாய்?", என்று, அலட்சியத்தோடு கருதிக்கிடந்த நம்நாட்டு மக்களிடத்திலே, படிக்கவேண்டும், உயர்படிப்புக்கு மகனை அனுப்பிடவேண்டும் என்கிற ஆவலும் ஆர்வமும் இப்போது, முளைவிட ஆரம்பித்துள்ளது. சரசுவதிக்குப் படையிலிட்டால் போதும் என்பதோடு இல்லாமல், அறிவுக் கோயில்களாம் பள்ளிகளுக்கும் போகச்செய்யவேண்டும் புதல்வர்களை எனும், தெளிவு, வளரத் துவங்கியிருக்கிறது நாட்டில்.

இந்த விழிப்பு, நமது நாட்டின் வளர்ச்சியில், குறிப்பிடவேண்டியதாகும். மூடநம்பிக்கை ஒழிந்து, முன்னேற்ற ஒளிபரவவேண்டும் என்று விரும்புவோர், ஆனந்தப்படவேண்டிய கட்டமாகும்.

*

ஆர்வமும் ஆவலும் அரும்பியுள்ளது! ஆண்டியப்பன் சாகிறான்—ஆவலிருந்தும், வசதியில்லாத காரணத்தால்! ஓரளவு வசதியிருப்போரோ, வசதியிருந்தும் இடம் கிடைக்காத காரணத்தால், ஏங்கியபடி கல்வி நிலையங்களை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்!!

வசதியில்லை—இடமில்லை, எனும் இரண்டு நிலைமைகள், இன்று நாட்டில் உள்ளன. ஏழையின் வயிற்றில் பிறந்தவன், எழில் மணக்கும் கல்வித்துறைகளை எட்டிப் பார்த்திட இயலாது! கிராமத்தைக் கடந்து, நகருக்குவந்து, மாதம் 50, 100 என்று அவனால் செலவழித்திட முடியாது"—எனவே, ஆண்டியப்பனாகிறான்!! கடன் வாங்கியோ, சொத்தை அடகு வைத்தோ, நன்கொடை பெறுவதன் மூலமோ, கல்வியின் மணத்தைப் பெறலாம் என முயலவோ, விரும்புகிறவர்களையெல்லாம் சேர்த்துக் கொள்ளுகிற அளவுக்கு, கல்வி நிலையங்கள் இல்லை. ஏனெனில் போதிய இடம்—தேவையான கருவிகள்—போதிக்கும் ஆசிரியர்கள், இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள்.

பின்தங்கிய ஒரு நாட்டில், கல்வி மணம் பரவ, சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுதல் அவசியம். அதற்கான முயற்சிகளைச் செய்துவருவதாக, ஆளும் அரசினரும் சொல்லுகிறார்கள். நிலைமையோ ஆண்டுதோறும் சீர்கெட்டு வருகிறது! ஆண்டியப்பர்கள் சாகிறார்கள்!!

*

கல்வி மணம் பரவவேண்டுமென்பதிலும், அதன் பலன் இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கிடைக்கவேண்டுமென்பதிலும், யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது—கெடுமதி, கொண்டவனைத்தவிர. ஆளும்கட்சி மட்டுமின்றி, அவர்களாட்சிக்கு ஆளாகும் எதிர்க்கட்சிகளுக்கும் இந்த

பிரச்சினை இப்படி வளர்ந்து கொண்டுபோகிறதே என்கிற கவலையிருக்கிறது. கல்வித்துறையில் தனி அக்கரைகாட்டும் நமக்கு, மிகமிகக் கவலை ஏற்படுகிறது. கல்வி ஒளி புகத் தலைப்பட்டால், மக்கள் மன்றத்தைப் பீடித்துள்ள அறியாமையும் மூடநம்பிக்கையும் வெகு விரைவில் அகன்று, விஞ்ஞானயுகம் பூக்கும் என்று தி. மு. க. கருதுகிறது.

உள்ள நிலைமையோ, ஒவ்வொரு அறிவுக்கோயிலின் வாயிலிலும் கூட்டம்—! இடம் கிடைக்குமா, தெரிந்தவர் உண்டா, யாரைப்பிடிக்கலாம் என்பது போன்ற பெருமூச்சுகள்! இன்னொருபக்கம், வசதியில்லாமல் சாகும் ஆண்டியப்பர்கள்!!

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியைச் சமாளிக்க, பற்பல வழிகளை வகுத்துள்ளோம்—நாங்கள் ஒன்றும் சும்மாயில்லை என்று ஆள்வோர், கூறக்கூடும். ஆனால், பிரச்னை பெரிது—அது தீர்க்கப்படுவதற்கான முழுச் சூழ்நிலையும் உருவாக்கப்படவில்லை, என்பதில் கருத்துவேற்றுமை இருக்க முடியாது.

கோளாறு எங்கே!—என்பதைக் கண்டுபிடித்து, வசதியில்லாமல் அலைவோர், இடமில்லாமல் வலம் வருவோர்—அனைவருக்கும் கல்வியின் ஒளி கிட்டும் படியான ஒரு திட்டம் தீட்டப்படவேண்டும்.

ஒவ்வொரு பள்ளியாண்டுத் துவக்கத்திலும் அறிவுக்கோயிலுக்குள் நுழைவதற்குள்ள நெருக்கடி அதிகமாகிக்கொண்டே வருகிறது! நல்லாட்சிக்கு, இது உகந்ததல்ல; நாட்டின் வளர்ச்சிக்கும் ஏற்றதல்ல!!

---

# இலங்கைத் தமிழரும் இங்குள்ள கா. தலைவரும்!

ஐயா,

இலங்கையிலுள்ள தமிழர் இயக்கத்துக்கும், இந்தியாவிலே உள்ள தமிழர் இயக்கத்துக்கும் நிரம்ப வேற்றுமைகள் உண்டு. இரண்டுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. சங்கடத்துக்கு ஆளாகும் மக்கள்பால்,—அவர்கள் அல்ஜீரியாவிலிருந்தாலும், சைப்ரசிலிருந்தாலும், இலங்கையிலிருந்தாலும், தென் ஆபிரிகாவிலிருந்தாலும்—ஒரு அனுதாபம் காட்டப்படுகிறதல்லவா, அதுபோன்றதே ஒழிய, வேறு சம்பந்தம் கிடையாது. இந்நிலையில், இலங்கை வாழ் மக்களின்பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல், தென்னிந்தியாவிலுள்ள இரண்டு அரசியல் தலைவர்கள், திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், பொறுப்பற்றவிதமாகப்பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சினை எடுத்து, தமிழ் மக்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட அநீதிகளை மறைக்கும் விதத்தில், இலங்கை அரசு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலிருக்கும் தமிழர் இயக்கம், பிரிவினையை விரும்புகிறது. இலங்கையிலுள்ள பெடரல் கட்சி, இலங்கையில் மொழி அடிப்படையில் ஒரு கூட்டாட்சி (பெடரல்) சர்க்காரை ஏற்படுத்த விரும்புகிறது. இப்படி அமையும் கூட்டாட்சியின் மூலம், தங்களது மொழியையும் கலாச்சாரத்தையும் காப்பாற்றிக்கொள்வதோடு, அரசுப் பொறுப்பிலும் தங்கள் குரலுக்கு செல்வாக்கு கிடைக்கமுடியும் என்று நம்புகிறார்கள். தங்களது 150 ஆண்டு ஆட்சிக்காலத்தில், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே, வெள்ளையர்களால் உண்டாக்கப்பட்ட ஒரு ஐக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதில், பெடரல்கட்சி அக்கரைகாட்டுகிறது. வெள்ளையர் நுழையுமுன், 2000 ஆண்டுக் காலத்துக்கு முன்பிருந்தே, இருதரப்பினரும் தனித்தனி அரசு அமைத்து, ஆண்டிருக்கிறார்கள். இருந்தும், இப்போது, கூட்டாட்சிதான் கேட்கப்படுகிறது.

வெள்ளையர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பாசமும் நேசமும், நீடிக்கவேண்டுமானால், 1948ல் கிடைக்கப் பெற்ற சுதந்திரத்தில் தமிழர்களுக்கும் பங்களிக்கப்படவேண்டும். இப்போதுள்ளபடி பார்த்தால், 'எஜமான மாற்றம்' மட்டுமே, இந்தச் சுதந்திரத்தால் தமிழர்களுக்குக்கிடைத்ததே தவிர, உண்மையான சுதந்திரம் மலரவில்லை. புது அரசியலமைப்புப்படி, சிங்களவர்களுக்கு ஏராளமான அதிகாரங்கள் ஏற்பட்டுள்ளன; தமிழர்கள் அடங்கி நடுங்கி வாழவேண்டியவர்களாக உள்ளார்கள். இந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளதால், இலங்கையரசு, தொடர்ந்து தமிழர்களை உதாசீனப்படுத்தியே வருகிறது. தமிழர்கள் வசிக்கும் இடங்களிலேயெல்லாம், சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழர் தம் நிலத்தையெல்லாம் சீர்கெடுத்து வருகின்றனர்.

1956-ல் "சிங்களவர்மட்டும்" என்கிற சட்டத்தையும் இலங்கையரசு செய்தது. இந்தச் சட்டத்தை, தமிழர்கள் மட்டுமல்ல, நல்ல உள்ளம் படைத்த சிங்களவர்கள் சிலர் கூட எதிர்த்தார்கள். இருந்தும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது-முன்பு அரசாங்க மொழியாக இருந்த தமிழ்—சிங்களம்—ஆங்கிலம், இம் மூன்றினில், சிங்கள மொழி மட்டுமே அரசாங்க மொழி என்று வலியுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

இலங்கை, "சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம்" என்கிற கருத்துடன், ஏனையவர்களையெல்லாம் தீவிலிருந்து விரட்டியோட்ட வேண்டும் எனும் கருத்து, சிங்களவர்களில் வெறிகொண்டவர்களிடம் வளர்ந்து வருகிறது. எப்போதாவது, தங்களது கோரிக்கையைத் தெரிவிக்க தமிழர்கள் அறப்போர், ஏதாவது துவக்கினால் இந்த வெறியர்கள், ஏனையோரைத் தூண்டிவிட்டு, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழர்களைக் கொடுமைப்படுத்தும்படி மக்களை ஏவிவிடுவதும், தூண்டிவிடுவதுமாகவுமேயிருந்து வருகிறார்கள். இதுபோன்ற சமயங்களில், அரசு சில நாட்களுக்கு வாளா இருக்கும். வெறித்தனம் நடைபெற்றபிறகே, ஓடோடிவரும் நிறுத்த!! பிரதமர் பண்டாரநாயகா, பிரமாதமாகப்பேசுவார்—

(16-ம் பக்கம் பார்க்க)

# கனி குடித்த உயிர்

**குறுந்தொகையில் ஒரு காட்சி**

**கோபி. கலிங்கன்**

### காட்சி 1.

இடம்:- நன்னனின் அந்தப்புரம்.

காலம்:- நிலவெறிக்கும் இரவு.

[சேரநாட் டெல்லையிலுள்ள பாலிநாட்டின் மன்னன் 'நன்னன்', கழுத்திலே தன் குலத்துக்குரிய பொன்மாலையின்றி, வீரக் கழலுமின்றி — முகம் சுருங்கி, வருந்துகிறான்— கடந்தகால நிகழ்ச்சியை எண்ணியபடியே...]

நன்னன்:- நீலவானில் களங்கமின்றிப் பவனி செல்லும் தண்நிலவே, என் வாழ்வு களங்கப்பட்டு விட்டதே......! என்னைக் கண்டு நீ நாணுவாய் என்றல்லவா இருந்தேன். 'நேற்றுவரை என் குலப்பெருமையைப் பாடிய புலவர்கள்,...... இன்று என் சிறுமையைப் பாடிப் பரிகசிக்கின்றனர்! நேற்று என்னை நாடி வந்து பரிசில் பெற்றுச்சென்ற பாணர்கள் இன்று என் கொடையை ஏற்காது, என்னை மதியாது செல்கின்றனர்! நேற்று என்னை நாடிவந்த மறவர் குலம், இன்று மகிழ்விழந்து வசை பாடுகிறார்கள்! அதைச் செவியுற்றும், பார்த்தும் தலை கவிழாத நீயல்லவோ எனைக்கண்டு நாணவேண்டும், வேதனைப்பட்டுத் துடிக்கவேண்டும் என்று தானே பார்க்கிறாய்! இதோ, என்னைப்பார்... கழுத்திலே வெற்றி மாலையில்லை, பொன் மாலையில்லை..., காலில் வீரக் கழலில்லை... ஏன்? என் வாழ்வை நானே மாசுபடுத்திக் கொண்டேன்..., இறந்த காலத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியைக் கேள்,...! அன்றொரு நாள்...!

### காட்சி 2

இடம்:- நீதிமன்றம்.

காலம்:- முற்பகல்.

பாத்திரங்கள்:- குற்றவாளியாக ஒரு சிறுமி, அவளின் பெற்றோர், மன்னன் நன்னன், அமைச்சர்கள், அவைக்களப் புலவர், மற்றும் பலர்...

அமைச்சர்:- அவையோரே! நீங்கள் கேட்கப்போகும் சேதி புதுமையானது மட்டுமல்ல, விசித்திரமும் கொண்டது! அஃதாவது... அரண்மனையைச் சேர்ந்த தோட்டத்துப் பசுங்கனி ஒன்று ...சிற்றோடையில் மிதந்து வர ...அக்கனியை எடுத்துச் சுவைத்துவிட்டாள் இதோ குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இச் சிறுமி! இதைத் தீர ஆலோசித்து நீதியளிக்கவே இம்மன்றம் கூட்டப்பட்டது. இதை நம்வேந்தரே விசாரிப்பர்!

நன்னன்:- இளஞ் சிறுமியே......! ஓடையிலே மிதந்து வந்த பசுங்கனி அரண்மனைத் தோட்டத்தைச் சேர்ந்தது. அதை நீ எடுத்துச் சுவைத்தது உண்மை தானே...!

சிறுமி:- பாலிநாட்டின் பெருநிதியே! மக்கள் தலைவ! புலவர் புகழும் புரவல! சென்றகிழமை மாலைப் பொழுதில் பள்ளிக்குச் சென்று திரும்புங்காலை... பளிங்கு நீர் ஓடையின் எழிலில் மயங்கி நின்றேன்......, பரவசமடைந்தேன் மாலையின் தென்றலில். அந்நீரோடையில் ஒரு பசுங்கனி மிதந்து வர... அதை எடுத்துச் சுவைத்தேன். நடந்த உண்மை இதுதான் மன்னவ!

நன்னன்:- குழந்தாய்! மாற்றான் தோட்டத்துக் கனியைச்சுவைப்பது குற்றமில்லையா...?

சிறுமி:- அரசே! நான் தெரிந்து செய்யவில்லையே...

நன்னன்:- தெரிந்தோ, தெரியாமலோ செய்த குற்றம் குற்றமே!......இம்மன்றத்தில் மறுத்துரைப்போருண்டோ...?

சிறுமியின் தாய்:- எம் இறையே! அறியாச் சிறுமி என் அழகு மகள்! எனவே கருணைகொண்டு இம்முறை மன்னித்துவிடுங்கள். மேலும் தான் செய்ததை மறுக்கவில்லை என்குலவிளக்கு!

நன்னன்:- தாயே! நீதி என்பது எல்லோர்க்கும் பொது. அதில் சிறியவர், பெரியவர், வலியோர், எளியோர் என்ற பேதம் கிடையாது...! பல வீரமைந்தரை ஈன்று பெருமைகொண்ட தாய் செய்தாலும், கல்வி பயிலும் சிறுமி செய்தாலும் குற்றம் குற்றமே......! மேலும் சிறுமி என்று இவளை மன்னித்துவிட்டால்........எதிர்காலத்தில் இப்பழக்கம் வளர்ந்துவிடும். ஆகவே இவளுக்கு மன்னிப்புக் கிடையாது......

தாய்:- ஐயகோ...நான் என்செய்வேன்...? அறம் பாடும் புலவர்

களே! நாடு காக்கும் நிர்மலர்களே! மாற்றுரை மருண்டோடச் செய்யும் மறவர்களே! நீதியின் சின்னங்களே! என் மகளுக்கு மன்னிப்பே கிடைமாதா...? கூறுங்கள்...! கூறுங்கள்!!

நன்னன்:- அம்மா......! நீ அழுதாலும், தொழுதாலும் பயன் இல்லை...! இச்சிறுமிக்கு மரண தண்டனை அளிக்கிறேன்...!

தாய்:- ஐயகோ......! இதென்ன கொடுமை...!

[மயங்கிக் கீழே சாய்கிருள்]

புலவர்:- மன்ன! இச்சிறுமிக்கு நீ அளித்தது நீதியல்ல......நன்கு சிந்தனை செய்து மீண்டும் தீர்ப்புக்கூறு; உன் எண்ணத்தை மாற்று...; வழி, வழிவந்த நின் புகழை நிலைநாட்டு; உன் வாழ்வைக் களங்கப்படுத்திக்கொள்ளாதே......உன் பரம்பரைக்கு மாசு தேடிக்கொள்ளாதே! தமிழகத்துச் சரித்திரத்தில் உன் புகழ் மங்காமல் ஒளிவீச வழி தேடு...!...சிறிது கருணைகாட்டு!

சிறுமியின் தந்தை:- அரசர் பெரும! அறியாச் சிறுமி...என் செல்வி...! அவள் செய்த குற்றத்திற்காக எனக்களியுங்கள் தண்டனையை; மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறேன்...! ...அவள் விடுதலைக்காக...பல கரிகளையும், அவள் எடைக்கு ஒரு பொற்சிலையையும் அளிக்கிறேன். அவளை விட்டுவிடுங்கள். எனக்குத் தண்டனை அளியுங்கள்!...உங்கள் பெருமையை, மங்காத புகழை நிலைநாட்டுங்கள்!

நன்னன்:- புலவர் பெருமானே! அவையோரே! உங்கள் மன்னன் சலனமனம் படைத்தவனல்லன். நீதியின் காவலன். எனவே எம் தீர்ப்புத் தீர்ப்பே! திரும்பப்பெற முடியாதது! தண்டனையை நிறைவேற்றுங்கள்!

[காவலர்கள் சிறுமியை இழுத்துச்செல்கின்றனர். தாய் தந்தையர் பிரிவைத் தாளாது துடிக்கின்றனர். மக்கள் கூட்டம் கண்ணீர் வடிக்கிறது...]

## காட்சி 3.

இடம்:- அந்தப்புரம்
காலம்:- பிற்பகல்......

[மன்னன் சிந்தனையிலிருக்கையில் அவன் தேவி மன்னனின் தவறை உணர்த்த......அதுபோது புலவர் நுழைகிருர்.]

அரசி:- நாதா! தெரியாமல் செய்த குற்றத்திற்காக மரண தண்டனையா? அதுவும் அறிவு வளராத பேதைச் சிறுமிக்கு......! கொடுங்கொலை செய்தாளா..., அல்லது தங்கட்கு எதிராக அவமரியாதை ஏதேனும் புரிந்தாளா...? மிக, மிகச் சிறிய நிகழ்ச்சியை, மலையளவு பெரிதாக்கி...... நானிலம் தூற்றும்படி..., மக்கள் மன்றம் கூட்டி உங்கள் வரலாற்றை மாசுபடுத்திக் கொண்டீர்களே...! ...இதுதான் அறமா...? தமிழ்காக்கும் காவலனின் செயலா இது...! கொடுமை!

நன்னன்:- தேவி, போதும் எம் மனதைக் குழப்பாதே! அரசியலிலே இவைபோன்ற நிகழ்ச்சிகள் மிக, மிக அற்பமானவை...!

[புலவர் வந்துகொண்டே]

புலவர்:- அற்பமானவையல்ல, மன்ன! அறிவுக்கொவ்வாத ...நினது நீதியை வையத்திற்கு எடுத்தியம்பி... நாளெல்லாம்... காலமெல்லாம்... வசைபாடச் செய்யும் அநீதியை வழங்கிய செயல்... அற்பமானதல்ல...! மன்னவா... மீண்டும் சிந்தனை செய்துபார்...... இன்னும் காலமிருக்கிறது...... தண்டனையை மாற்று...!

நன்னன்:- புலவரே! நீதி வழங்கியது... வழங்கியதே...! அதை மாற்றுவதென்பது இயலாதது ... தாங்கள் போகலாம்!

புலவர்:- இதுதான் நீதியோ! இனி உன் புகழ் பாடிய புலவர்கள்... உன் அழிவுக்காக அறம் பாடுவார்கள்......! உன் புகழ் பரப்பிய தமிழ், உன்னை அநீதியின் நிலைக்களனுக்கி...சபிக்கும்! மக்களின் அகமெல்லாம் தூற்றும்! பிறகென்ன...தமிழ்பாடும் புலவர்களை இழந்த நீ, நீதியை மறந்த நீ..., மக்களைமறந்த நீ..., மனிதனுகவா உலவ முடியும்...! ...போ...! போ...! கண்ணீர் விட்டுக் கதறு! வருகிறேன்...! இனி உன் கொற்றம் அழிக! (போகிருர்...)

*

... பழைய... நினைவு...

## காட்சி 4

இடம்:- அந்தப்புரம்.
காலம்:- இரவு. (நிலவு மறைவுகிறது)

நன்னன்:- நிலவு மங்காய்!, "அநீதியின் பிறப்பிடமே! போதும் உன் நீதியின் கதை...! இனியும் என்னுல் கேட்க முடியாது...! உன் வதனத்தைப் பார்க்கவும் முடியாது......", என்றுதான் முகிலுனுள்ளே மறைந்து கொண்டாயோ? உனக்கிருக்கும் நாணம், உயர்வு, மக்களின் புகழ் மாலை......,கவிகளின் பாமாலை எனக்கினி ஏது? இனி அவைகளை வேண்டி அழைத்தாலும் வாரா...!...சிறுமியின உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்...! சென்ற உயிர் மீளாது...! அழுகிய கனி காயாகுமோ...? இனி ...... எனக்கு...எதற்கு இந்த வாழ்வு......! என்னுடன் என் வம்சமே அழியட்டும்! அதுதான் எனக்கு நானே அளித்துக் கொள்ளும் தீர்ப்பு...!


குடந்தை திருநகர் மக்கள் மன்றம்

**2-வது ஆண்டு விழா**

6—7—58 ஞாயிறு

திருநகர் நாடகக்கலைக் குழுவினர்

**நாடு காத்த நல்லவன்**

எனும் நாடகத்தை திறந்தவெளியரங்கிலே நடிப்பர்.

அன்பு சகோதரர்கள், பொருளுதவி வழங்க வேண்டுகிறேன்.

G. சுப்பிரமணியன், B.A. (Hons) நிர்வாகி.

# "ஜீவனாம்சம்!!"

—[மாண்மகிழன்]—

"என்னை அழைத்தீர்களாமே"

"ஆமாம், நின்றுகொண்டே இருக்கிறீரே, முதலில் அமருங்கள்!......அவசரமாக எங்காவது போகவேண்டி உள்ளதா?"

"அப்படியொன்றும் இல்லை....

"அப்படியானல், பொறுமையாக இருந்து, நான் சொல்லப் போவதற்குச் செவி மடுத்து நுட்பமாகக் கேளுங்கள். பின்பு கேட்பேன்; சரியான, முடிவான உங்கள் கருத்தைக் கூறுங்கள்; சரி தானே."

"சீனுவில் அழகான பெண்ணொருத்தி இருந்தாள். அவளுக்கு நெடுநாட்களாகத் திருமணம் ஆகாமலே இருந்தது. இதைக்குறித்து அந்த வெண்ணிலா முகத்தழகி, எல்லாப்பெண்களையும் போலவே உள்ளூர வருந்திக் கொண்டிருந்தாள். 'வெறுப்பில்' பெற்றோர்களைக் கூடக் கசப்பாக நோக்கி வந்தாள். இதைக் கண்ட அப்பெற்றோர்கள் நைந்துருகினர்கள். எங்ஙனமேனும் மாப்பிள்ளைபார்த்துக்கலியாணத்தை முடித்துவிடத் தீவிரமாக முயற்சிக்க ஆரம்பித்தார்கள்.

எப்படியோ ஒருவாறு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து, கலியாண ஏற்பாடுகளைச் செய்து கொண்டு கடிதில் திரும்பிவிட்டார்கள். இதை அறிந்தாள் அவள். மெய் சிலிர்த்துப் போகாமலும் இருப்பாளா? கலியாண வழியின்மேல் விழிவைத்து நோக்கிக் கிடந்தவளாயிற்றே.

அந்தப் பாழாய்ப்போனவளுக்கு கலியாண இன்பம் பருகுவதற்கு, இடையே இருந்த, சிலநாட்கள், சில ஆண்டுகளைப் போல் துன்பத்தைகொட்டித்தந்து எப்படியோ நகர்ந்து ஒழிந்தன.

அன்று. திருமணநாள்! கோலாகலமாக அலங்கரித்து விடப்பட்டிருந்தது அந்தத்திருமண விடுதி. அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் இப்படி யாவருமே புடைசூழ்ந்திருந்தார்கள். பட்டை தீட்டப்பட்ட வைரத்தைப் போல் ஒளிந்து கொண்டிருந்த அவளோ என்னென்னவோ கனவுகளைக் கண்டுகொண்டிருந்தாள். மணப்பந்தலுக்குச் செல்லத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். நேரமோ சென்றுகொண்டிந்தது. ஆனல் அவளைத் திருமண மேடைக்கு அழைத்துச் செல்லாமலே இருந்தார்கள்.

திருமணத்தில் குழுமி இருந்தவர்களோ மணமகனின் வருகைக்காக எதிர்நோக்கி அலைந்து கொண்டிருந்தார்கள். மணமகன் இன்னும் வரவில்லையே என்று கைகளைப் பிசைந்துகொன்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒருவன் புன்னகைப் பூத்த முகத்தோடு தடபுடலாக வந்தான். எல்லோரும், அவனை ஆவலோடு பார்த்தார்கள். எங்கோ இருந்த அந்தப் பரிதாபத்துக்குரிய மணமகளும் அவனை எட்டிப் பார்த்தாள். அவள் உள்ளம் பூரித்துப் போயிற்று. சமயம் சந்தர்ப்பம் அறியாத அந்த வெட்கம் சும்மா இருக்கிறதா...அதுவேறு வந்து தொலைந்தது! நாணிக்கோணி உள்ளேபோய் மறைந்துக்கொண்டாள்!

வந்த அவனே நேராக மணமகளின் தந்தையிடம் சென்றான். சட்டைப்பைக்குள் இருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பயபக்தியோடு அவரிடம் கொடுத்தான். ஏதோ என்னவோ என்று பிரமித்துப்போன அந்த மனிதர் அக்கடிதத்தைத்திகிலோடுவாங்கினர். ஆவலோடு பிரித்தார். அதில்! "அன்புடையீர், கலியாணத்திற்கு எப்படியேனும் வரவேண்டுமென்றுஎவ்வளவோ முயன்றேன், சந்தர்ப்பம் சதி செய்துவிட்டது! என்ன செய்வது?.........ஆனலும் என்ன...? திருமணம் நடக்கட்டும்! மற்றொரு சம்பிரதாயப்படி எனக்குற்ற நண்பனை எனக்குப்பதிலாக அனுப்பி வைக்கிறேன். கவலை வேண்டாம். இன்னும் சில நாட்களில் எங்ஙனமேனும் வந்து என் அருமை மனைவியை அழைத்துச் செல்கிறேன்!" என்று மணமகன் குறிப்பிட்டிருந்தான்.

அதன்படி திருமணம் முடிந்தது. தேன் நிலவு இனித்தது! மணமகன் இல்லாமலேயே இத்தனையும் நடந்தது!

ஆண்டுகளும் உருண்டோடின! மழலைகளும் நடைபயின்றன. ஆனல் அந்த 'மணமகன்' மட்டும் வரவேயில்லை.

திடீரென்று ஒருநாள் 'மணமகனின்' நண்பன் மாண்டுபோனன்!

அந்த அழகரசி துணையற்றவளானள்! , அநாதையானள்! குழந்தைகளோ பாலுக்கு அழுதன! இதுவரை அவளைக் காணுமலே இருக்கும் தன்கணவன்மேல் அவளுக்குச் சொல்லமுடியாத கோபம்! கஷ்டத்தை அறியாமல் —பணம் அனுப்பாமல் இப்படியே போய்க்கொண்டு இருக்கின்றானே என்ற வருத்தம்!

கணவனைத் தேட ஆரம்பித்தாள்! அவன் ஹாங்காங்கில் இருப்பதாகத் தெரிய வந்தது.

அவன்மேல் ஜீவனாம்ச வழக்குத் தொடர்ந்தாள்! கோர்ட்டில், தன் கணவன் எப்படி இருப்பான் என்றே அறியாத அவள், அவனை முதல் முறையாக — மணமாகிப் பல ஆண்டுகளுக்கப்பால் கண்டாள்!

ஹாங்காங் நீதிமன்றம் இந்தச் சதிபதியர் விசித்திரக் கதையைக் கேட்டது. அவள்ஜீவனாம்சத்தைக் குறித்து ஒரு வழிகாணமுடியாமல் திக்குமுக்காடியது!

கேட்டீர்களா கதையை?

இப்பொழுது சொல்லுங்கள் அவளுடைய ஜீவனாம்சக் கோரிக்கையைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்தை!

★

# அவதி அகல வழி உண்டா?

பி. கே. வேலன்

நமது சகோதரத் தமிழர்கள் இலங்கையில் அனுபவிக்கும் இன்னல்களை எண்ணும்பொழுது நெஞ்சம் புண்ணாகிறது. அதற்கு ஆவன செய்யாது தமிழர்களைப் புறக்கணித்துச் செயல்படும் டில்லி சர்க்காரைப்பற்றி நினைக்கும்பொழுதோ நெஞ்சம் கொதிக்கிறது; எரிமலை போல் குமுறவும் செய்கிறது. சென்னை மாநில மக்களுக்காகச் சென்னையில் அமர்ந்து அரசோச்சும் காமராசு சர்க்கார், இலங்கையில் தமிழர்கள் இன்னல் கடலில் சிங்கள வெறி என்ற அலைகளால்மோதி அடிக்கப்படுவதைக் கண்டும், கேட்டும் வாளா இருப்பதைப் பார்க்கும்பொழுது. எட்டிகாயாது இருந்தென்ன, காய்த்துப் பலனென்ன என்பதுபோல இந்த மந்திரிசபை இருந்தாலென்ன, போனலென்ன என்ற எண்ணமே தமிழர்களின் இதயத்தில் உதயமாகிறது. வடநாட்டைப் போல தென்னாட்டையும் வாழவைக்கவேண்டும் என்ற எண்ணம டில்லி சர்க்காருக்கு இருக்குமேயானல், பண்டாரநாயகாவைத் தட்டிக் கேட்டிருக்கலாம். அல்லல்படும் தமிழர்களுக்கு ஆறுதல்கள் பல கூறியிருக்கலாம். இதோ அடைக்கலமும் தருகிறோம் என்று சொல்லி அகதிகளாக வரும் தமிழர்களுக்கு ஆவன செய்திருக்கலாம். ஆனல் அப்படி ஒரு காரியமும் செய்யவில்லை. சொல்லும் இல்லை; செயலும் இல்லை.

வடநாடு வாழ்கிறது; தென்னடு தேய்கிறது என்று சட்ட மன்றத்தில் நம் தோழர்கள் முழங்கிய பொழுது சென்னை மந்திரிகள் துடியாய்த் துடித்தனர். இன்று என்ன சொல்வார்களோ தெரியவில்லை. தனக்கும் தனது மக்களுக்கும் வேண்டிய உரிமைகளைப் பெற முடியவில்லை சென்னை சர்க்காரால். அதோடு இருந்துவிட்டாலும் பரவாயில்லை. வடநாடு மட்டுமே வாழ வழி வகைகள்செய்து செயல்படும் டில்லி சர்க்காருக்குப் பக்க பலமாகவும் இருக்கிறது சென்னை சர்க்கார்.

பாகிஸ்தானிலிருந்து பதறி ஓடி வரும் அகதிகளுக்குத் தனி நகர் முதலாக அமைத்து ஆவன செய்து ஆதரிக்கிறது டில்லி சர்க்கார். அவர்களை ஆதரிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தெடுத்து வசூலித்துப்போன வரிப் பணத்தைக் கோடிகோடியாக வடநாட்டு அகதிகளுக்காக் கொட்டுகிறார்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. அதே போன்று இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் மலாயாவிலிருந்தும்வரும் தென்னாட்டைச் சேர்ந்த தமிழ் அகதிகளுக்கும் வேண்டுவன செய்யவேண்டுமல்லவா? செய்ய நினைப்பதாகக் கூடத் தோன்றவில்லை.

ரோமானியர்களும், கிரேக்கர்களும் நாகரிகமாக வாழ்வதற்கு முனபே நாகரிகமாக வாழ்ந்த இனத்தவர்கள் தமிழர்கள். தமிழர்களையும், தமிழ் நாட்டையும் மேன்மைப்படுத்தவேண்டும் என்பதற்காக மேலுக்காகக் கூறும் கூற்றல்ல இது. உண்மையிலேயே தமிழர்கள் உலகுக்கே முன்னணி வீரர்களாகத் திகழ்ந்தார்கள். இதற்குச் சான்றுக உள்ளவை சங்கநூல்களும் சரித்திர நூல்களுமேயாகும்.

இப்படி அவதியுறும் நாடுதான் பண்டைக் காலத்தில் மூவேந்தர்கள் ஆண்ட பொழுது அவர்கள் சிங்களவர்களைத் தங்களின் உறவினர்களாகக் கருதியும் நடத்தியும் வந்தார்கள். இன்று சிங்களவர்கள் தமிழர்களை நண்பர்களாகக்கூடக் கருத மறுக்கிறார்கள்.

இலங்கையும், பர்மாவும் மலாயாவும் இன்று உலக நாடுகளோடு ஒட்ட ஒழுகிவருகின்றன. அதற்குத் தலையாய காரணகர்த்தாக்கள் தமிழர்களே. தமிழர்கள் இலங்கை சென்றார்கள்; பர்மா சென்றார்கள்; மலாயா சென்றார்கள். உடலிலும், உள்ளத்திலும் முன்னேற்றமும் சுறுசுறுப்பும் இல்லாதிருந்த மக்களோடு தமிழர்கள் தங்களுக்கே உரித்தான அன்போடு பழகி நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, புகுந்த இடத்தையும் பிறந்த இடமாகக் கருதிப் பொன்னுடாக்கினர்கள். இன்று மற்ற நாடுகளோடு சமத்துவமாகச் செயல்படும் நிலையில் அந்நாடுகள் உள்ளன. ஆகவே அவர்கள், குறிப்பாகச் சிங்களவர்கள் தாங்கள் தமிழர்களால் முன்னேறினோம்; இன்று முன்னணியில் நிற்கிறோம் என்பதை மறந்து, தமிழர்களுக்கு எண்ணற்ற இன்னல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவர் குறளை அறிந்திருந்தால் அவ்வாறு செய்யமாட்டார்கள். ஒருவேளை அவர்கள் கற்ற நெறிப்படி நிற்காத கயமைக் குணம் படைத்தோராக இருக்கலாம்.

பிறப்பால் தமிழர்களாக இருந்தும் சிங்கள அரசுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறோம் என்று வாக்களித்து இலங்கையில் வாழும் உரிமை வேண்டி இலங்கைத் தமிழர்கள் மனுப்போட்டார்கள். பெரும்பாலான மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இலங்கையில் வாழும் உரிமையை இழந்தவர்கள் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டனர். இலங்கையில் வாழும் உரிமையை இழந்தவர்கள் தாயகமாம் தமிழகத்தில் வாழ வழியின்றித் தவிக்கின்றனர்.

தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியைத் தங்களுடைய உயிரைவிட மேலாகக் கருதிச் செயல்படக்கூடியவர்கள். பண்டாரநாயகா தமிழ்மொழிக்கும், அரசியலில், சிங்கள மொழிக்கு அளிக்கும் உரிமையை அளிப்பதாக ஒப்புக்கொண்டு உடன்படிக்கையும் செய்து கொடுத்தார். இன்று உடன்படிக்கையை மீறியதோடு மட்டுமன்றித் தமிழ் மொழியைப் பாதிக்கக்கூடிய செயல்களையும் செய்துவருகிறார். அரசின் ஆதரவோடு சிங்கள வெறியர்கள் பொறுக்கமுடியாத துன்பங்களை எல்லாம் செய்து வருகிறார்கள்

தமிழ்மக்களைக் கொடுமைப்படுத்தி வருகிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இழந்துகொண்டு வருகிறார்கள். பத்திரிகைகள் மூலமாக இலங்கைச் செய்திகளை ஒருவாறு அறிகிறோம். பத்திரிகைச் செய்திகளைப் படிக்கும் பொழுதே நமது உள்ளம் படாத பாடுபடுகிறது. நேரில் காண நேர்ந்தால் நெஞ்சமே வெடித்துவிடும்.

பண்டாரநாயகாவின் அரசு கொழும்பு நகரிலுள்ள தமிழர்களை, ஏறக்குறையப் பத்தாயிரம்பேர்களை இரண்டு தடவைகளாகக் கப்பல்களிலும் இரயில் மூலமாகவும் யாழ்ப்பாணத்தில் கொண்டு வந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இறக்கிவிடப் பட்டிருக்கும் தமிழ் மக்கள்—தமிழ் அகதிகள உணவு, உடை, இடம் இன்றித் தவிக்கிறார்கள். அதே நேரத்தில் எங்கெங்கோ, ஏனோதானோக்களாகத் திரிந்த, சிந்திக்கவும், செயல்படவும் தெரியாத சிங்களவர்களைக் கொழும்பு நகருக்குக் கொண்டுவந்து வாழ்வளிக்கிறார்கள். தண்ணீரில் வாழும் மீனைத் தரையில் கொண்டுவந்து வாழவைப்பது போன்றிருக்கிறது பண்டாரநாயகாவின் செயல்.

தமிழர்கள் நலனுக்காகவும் தமிழ்மொழியின் உரிமைக்காகவும் பாடுபடும் தலைவர்கள் எல்லாம் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை அரசு தமிழர்களை இன்னும்என்னென்ன செய்யக் காத்துக்கொண்டிருக்கிறதோ தெரியவில்லை.

இந்நிலையிலும் நேரு சர்க்கார் வாளா இருப்பது நேர்மை உள்ள செயலாகத் தோன்றவில்லை. சென்னை சர்க்காருக்கு இலங்கை வாழ் தமிழ்மக்களின் நல்வாழ்வில் அக்கறை இருப்பின் தமிழர்களின் நலனுக்கு ஆகவேண்டிய காரியங்களை இப்போதாவது உடனடியாகச் செய்யவேண்டும்.

★

> ஒரு பெரிய புத்தகத்தை அவசரமாகப் படித்து முடிப்பதை விட, ஒரே பக்கத்தை நன்றாகப் படித்து அறிவு பெறுவது மேலானது.

# கூத்துக் கலைஞன்!

[இரா. மதனகோபால், பி. காம்.]

எழில் மிக்க ஏதன்சு நகரம் ஏற்றமிகு இவ்வுலகிற்கு அளித்த மேதையர்கள் எண்ணிறந்தவர்கள். அவர்களில் கூத்துக் கலைஞர்கள் முதலிடம் வகிக்கின்றனர்.

இன்று நம் நாட்டிலே திரைப் படங்களில் நடிக்கும் கலைஞர்களையும், நாடக நடிகர்களையும் "கூத்தாடி" என்று கேவலமான தொனியில் அழைத்து வருவது மங்கி, மறைந்து வருகிறது. மாறாக அக்கலைஞர்களுக்கு மதிப்பும், மாண்பும் பெருகி வருகின்றது.

போர் மிகவும் பயங்கரமாக நடந்துகொண்டிருந்தது. ஆவேசமாக வீசும் காற்றிலே இரத்த வாடை கலந்து இன்னும் மோசமாக ஆக்கிக்கொண்டு இருந்தது. போர்க் கவசம் பூண்டிருந்த வீரர்கள் உக்கிரமாக ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். வாட்கள் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பொறி கக்கிக்கொண்டிருந்தன; அவற்றின் சத்தமும், வீரர்களின் அலறலும் கேட்கப் பயங்கரமாக இருந்தது. ஓய்ந்து விழும் கைகால்களும் சாய்ந்து விழும் சடலங்களும் வழிந்தோடும் குருதியுமாக இருந்தது போர்க்களம். சண்டையிடுபவர்களின் ஆவேசக் கூக்குரலும், காயம்பட்டவர்களின் கதறலும், பெருமூச்சும் தான் களத்தில் நிறைந்திருந்தன!

அந்தப் போர் வீரர்களிலே ஒருவன் சிறிது பின்னடைந்து, கணநேர ஓய்விற்காக நின்றான். அவன் "குழந்தை பெறுவது இது போன்றுதான் போலும். ஆனாலும் இந்த அளவு அது மோசமாக இருக்காது!" என்று அதுபோது கூறினான்.

அவன் வேறு யாருமில்லை! உலகிற்கு உன்னதமான நாடகாசிரியர்களை அளித்த ஏதன்சின் தலைசிறந்த நாடக எழுத்தாளனான "யூரிப்பிடீஸ்" பார்ப்பவர்களுக்கு வெறுப்பும், கோபமும், ஆத்திரமும் ஊட்டும் வண்ணம் நாடகம் வரைந்து, பெண்ணினத்தை வெறுத்து வசைபாடும் எழுத்தாளன் என்று கூறுவர் யூரிப்பிடீசை!

குழப்பத்தில் சிக்கிய மக்கட்கூட்டத்திற்குச் சிந்தனையாளன் ஓர் எதிரி. அவ்வகையில் யூரிப்பிடீஸ் கூட மக்களின் எதிரிதான். நடப்பவைகளையும், நிகழும் கேவலமானவைகளையும் உள்ளது உள்ளபடி, தெள்ளத் தெளிய, எள்ளத்தனையும் தயங்காது நாடகமாக வடித்து நாட்டினரின் முன் வைப்பான். "பெர்னாட் ஷா" போன்று அவனும் மனிதர்களை நையாண்டி செய்து, சமூகத்தின் ஊழல்களை இழிவுகளை, நடை முறைகளை, பழக்க வழக்கங்களைச் சுட்டிக் காட்டி எழுதுபவன்.

கடைக்குணம் மிக்கவன், கன்னிகளை வெறுப்பவன், கடைகெடுத்த அயோக்கியன் என்றுதான் அன்றும் இந்தப் பாழும் சமுதாயம் அந்த மேதைக்குப் பட்டம் சூட்டிற்று. அதுமட்டுமன்று, அவன் நாத்திகன், கடவுளின் மீதும் மனிதர்களின் மீதும் வஞ்சம் வைத்துக்கொண்டு வரைகிறான் நாடகங்களை என்றும் கூறினார்கள் அன்றைய 'பெரியவர்கள்.'

இருந்தும் அவர்களைமறியா மலேயே அந்த எழுத்துலக மேதையின் அற்புதப் படைப்பு களைப் பார்க்கத் தூண்டின அவ னுடைய அழகு நடையும், அலங் கார வார்த்தைகளும், அறிவுக் கருத்துக்களும். அவன் தன் படைப்புக்களையெல்லாம் பா வடி விலேயேதான் செய்தான்.

அவன் போர்க்களத்திலே புகன்ற வார்த்தைகள் அவன் எண்ணம் வனிதயரைப் பற்றியது எப்படியென்பதை ஓரளவு காட் டும். அவனுடைய வெறுப்பிற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு! கவிஞனின் கற்பனை வளம் மிக்க நாடகாசிரியன்தான் அவன். அவன் மனிதர்களைச் சிந்திக்க வைத்தான். நாட்டிலே காணப் படும் கேடுகளைச் சுட்டிக்காட்டி னன். அவன் பழைய கதைகளை யும், பழைய (மாஜி) கடவுள்களை யும் பற்றித்தான் எழுதினன் என் ருலும், அதைக் கேட்டும், கண்டும் போனவர்களிடையே ஓர் விழிப் புணர்ச்சியை உண்டுபண்ணினன்.

அவன் ஒரு மேதைத் தன்மை நிறைந்த புரட்சிவாதி; அறிஞன். அவன் எழுதி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்ருலும் இன்றுகூடப் படித்து, சுவைத்து பல அரிய சேதிகளை, உயர்ந்த தத்துவங்களை அறிந்துகொள் ளும் வகையில் எழுதியுள்ளான். அவனுடைய வாழ்நாளில் அவன் தான் கிரேக்கத்தின் பெருமை மிகு கவிஞன் ஆக இருந்தான். இறக்கு முன்னரே அவனுக்குத் தெரிந்தது அவனுடைய புகழ் இறவாதது என்று.

கி. மு. 480-அளவில் அவன் இவ்வுலகில் பிறந்தான். அப் போது பெர்ஷிய பேரரசனை ஜெர்க்சசின் பெரும் கப்பற் படையை சலாமிசில் கிரேக்கர்கள் வென்ற நாள் அது. கிரேக்கத்தின் முப்பெரும் நாடகாசிரியர்கள், ஏகி லஸ் சலாமிஸ்போரில் சண்டை யிட்டதாகவும், சோபாக்கிளீஸ் சிறுவர்களின் கோரஸ்ஸில் பங் கெடுத்துக்கொண்டு ஆடியதாக வும், சண்டை நடந்த ஆண்டில் யுரிப்பிடீஸ் பிறந்ததாகவும் 'வழி வழி கதை' கூறுகிறது. யுரிப்பி டீசின் தந்தை கடன் வாங்கி ஏமாற்றினவன், அயோக்கியன் என்றும், அவன் தாய் அழுகல் காய்கறிகளை விற்கும் கடைக்காரி என்றும் அக்கதை கூறுகிறது. இது அவ்வளவும் உண்மையல்ல, யுரிப்பிடீசின் பெருமையைச் சிதைக்கச் சிலசின்னதுகள்செய்த சித்து விளையாடல் எனலாம். அவன் தந்தை நெசார்க்கைட்ஸ் பெரிய பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், பில்யாவில் உள்ள அப்போலோ கோயிலைச் சேர்ந்த ஓர் அலுவலகத்தின் உரிமையாளன் என்றும்; அவன் தாய் காய்கறி விற்றவள் என்ரு லும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதும் வரலாற் ருசிரியர்கள் கூறும் உண்மைகள்.

அவனுடைய இல்லக்கிழத்தி யைப்பற்றியும் இப்படித்தான் இல் லாததும், பொல்லாததுமாகச் சிலர் புனைந்துரைத்துள்ளனர்.

யுரிப்பிடீஸ் இளைஞனயிருக்கை யில் சித்திரம் வரையக் கற்றுக் கொண்டிருந்தான். அதை நடுவில் நிறுத்திவிட்டுத் தன் கவனத்தை உலகிலேயே சிறந்த பணியான எழுத்து வேலையில் செலுத்தி னன. ஆம், அவன் கவிதைபுனைய வும், அவலச்சுவை நாடகம்வரைய வும் விழைந்தான்.

அவன் முதல் நாடகம் "தி டாட்டர்ஸ் ஆப் பீலியாஸ்" என் பது. 455 கி. மு. வில் வெளிவந் தது. அன்றிருந்து ஏதானிய பெருமக்கள் இதோ ஒரு புது விண்மீன் கிளம்பியுள்ளது; அது ஒளிவிட்டுப் பிரகாசிக்கப் போகி றது என்று அறிந்துக்கொண்ட னர். இந்த இளங் கவிஞன் கடின மான உயர்ந்த நடையில் எழுதா மலும், 'பெரியவர்'களின் பாணி யைக் கைக்கொள்ளாமலும் தனக்கே உரிய எளிய — ஆனல் எழில் நிரம்பிய, அழகு மிளிர, அறிவு பொங்கி நேரடி நடையைக் கைக்கொண்டான். உண்மையை உரைக்கும் தன்மை, உள்ளதை உள்ளபடியே எடுத்துக்காட்டும் வண்மை அன்று புகுந்தது நாடக உலகில், யுரிப்பிடீசால்.

இந்த நாடகக் கவிஞரின் நடை யில் நளினம் காணப்பட்டது. நாடகத்திலே இவர் உச்சக்கட்டத் தைப் புகுத்தும்போது புதுமுறை யைக் கையாண்டார், நாடகத் திலே வரும் காட்சிகளின் அமைப் பும், கவினூறும் கவிதை நடை யும், அற்புதமான முடிப்புமாகச் சேர்ந்து நம்மை வியப்பில் ஆழ்த் தும். அத்தகைய எழுத்து மேதை அவர்.

"மெடிலிபஸ்" என்று அவர் எழுதியுள்ள நாடகம் மிகவும் அற் புதமாக எழுதப்பட்டது. அந் நாடகத்தின் "கரு" புராணத்தது தான் என்ருலும், அது கி. மு. 438-ம் ஆண்டில் நடித்துக் காட் டப்பட்டபோது பேரும் புகழும் கிடைத்தன. பாராட்டுகள் பல குவிந்தன. அந்த அரிய நாடகப் பிரதி தொலைந்துபோயிருந்தாலும் சில பகுதிகள் உள்ளன. அவையே போதும் யுரிப்பிடீசின் திறமையை உலகுக்குப்பறைசாற்ற.

யுரிப்பிடீஸ் ஏறக்குறைய எண் பதுக்குமேல் தொண்ணூறுக்கு உட்பட நாடகங்கள் எழுதியுள் ளான். அவற்றில் நமக்கு கிடைத் தவை ஒருசிலவே.

"இறந்தவர்களுக்கு நினைவு உண்டென்பது உண்மையானல், உடனே நான் தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்வேன், இறப்புலகில்யுரிப்பி டீசை சந்திக்க" என்று பிலிமென் சொன்னதே போதும யுரிப்பிடீ சின் புகழை அறிந்துகொள்ள.

★

வாழ்க்கையில் ஒவ்வொரு சிக்கலும் எதிர்ப்படும்போது ஒதுங்கிச் செல்வதும் உண்டு, ஒதுக்கிச் செல்வதும் உண்டு. ஒதுங்கிச்செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்த வாழ்க்கை; ஒதுக்கிச் செல்வதோ, அக் கறையற்ற வாழ்க்கை. இந்த இரண்டும் பயன் இல்லை. சிக் கலைத் தீர்த்து வெல்லும் வீரம் வேண்டும். அதுவே புத்துலகத்தின் திறவு கோல்.

# மாந்தோப்பு மங்கை

—[ வித்வான் எம். ஏ. கிருஷ்ணன் ]—

ஊரின் புறத்திலுள்ள மாந்தோப்பில் மங்கையரின் மகிழ்ச்சியொலி கேட்கிறது. சற்றுமுன் சிலவாகப் பெய்த மழைத்துளிகள் மாவிலைகளில் பதிந்து முத்துப்போல் காணப்படுகின்றன. மாசுபடிந்த முகத்தைத் தூய்மையாக்கியது போலுள்ள அவ்விலைகளுக்கிடையிலே கண்பொத்தி விளையாடும் கன்னியர்கள் ஓடி ஒளிகின்றனர். அழகே உருவான ஆரணங்கொருத்தி அன்ன நடையால் நடந்து, மான்விழியால் மருண்டு மருண்டு நோக்கி வருகிறாள். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதற்கேற்பப் பைந்தொடியாள் வருகையினைச் சிலம்பொலிகள் உணர்த்தியது. தேடிவரும் அப்பேரழகி காணமுடியாதபடி ஏந்திழையர் நன்கு மறைகின்றனர். அவள் முயற்சிக்கு யாரும் அகப்படாமையால் முகமெல்லாம் வியர்வை தோன்றுகிறது. அதோ! அங்கு இலையை நெருக்குவதால் ஓசை கேட்கிறது. ஒளிந்துள்ள தோழி கிடைத்துவிட்டாள் என்று உள்ளத்தால் மகிழ்கிறாள். ஓசைவந்த திக்கை நோக்குகிறாள்; ஓடுகிறாள்; என்ன வியப்பு! கடன்காரரைக் கண்டதுபோல் தலையைக் கவிழ்த்துக் கொள்ளுகிறாள் அந்தக் கட்டழகி!

மலைமீது காலைமுதல் மாலைவரை வேட்டையாடிவிட்டு வந்தான் வேலும் அம்பும் கொண்ட வீரன்! கன்னித்தமிழ் கற்றவன் என்பதை அவன் புன்னகை முகம் காட்டியது. கடமை உணர்ச்சியுடையவன் என்பதைக் கூர்ந்து நோக்கும் விழிகள் உணர்த்தின; அந்த ஆணழகனை எதிர்பாராமல் நோக்கிய செந்தமிழ்ச் செல்வி நாணத்தால் கீழ்நோக்கியது தவறில்லை யல்லவா?

செல்வனும் செல்வியும் விழியால் கண்டனர்; மொழியால் பேச முற்பட்டனர். ஆனால் வாயில் சொற்கள் எழவில்லை. அவன் நோக்கினான் — அவள் தலையை தாழ்த்திக்கொண்டாள். அவன் நோக்காதபொழுது கடைக் கண்ணால் நோக்கி மெல்ல நகைத்தாள்; இவ்வாறு இணைந்த இருவரும் பிரிய மனமின்றிப் பிரிகின்றனர்.

இரண்டாம் நாள் அதே இடத்தில் தலைவன் தலைவியைச் சந்திக்கிறான். நங்கையும் நம்பியை மகிழ்வோடு வரவேற்று, செந்தமிழால் பண்ணிசைத்து, மயில்போல ஆடிக் காட்டுகிறாள். தகைமை சான்ற வேல் வீரனும் தேமொழியின் இனிமையினைப் பைந்தமிழால் பைந்தொடிக்குக் கூறுகிறான் "அன்னாய்" என்று தோழியர் அறைகூவ நேரிழையாள் நீங்குகிறாள்.

புதிய நட்பைவிட மகிழ்ச்சி தருவது எதுவுமில்லை. பிரிவதைவிடப் பெருந்துன்பம் பிறிதொன்றுமில்லை என்று கூறினார் சீனத்து அறிஞரொருவர். இருவரும் புதிய சந்திப்பால் மகிழ்ந்தனர்; பிரிவால் பெரிதும் வருந்துகின்றனர். நாளும் கருத்தோடு பணிபுரியும் தலைவனின் முகம் வாடியுள்ளது. அர்த்தமின்றி எதையெதையோ கூறுகிறான். முறையான செயலாற்றும் அவனிடம் குறை காணப்படுகிறது. உயிர்த்தோழனுக்கு ஒன்றும் புரியவில்லை. உள்ளத்தில் ஏதேனும் வருத்தம் இருக்கவேண்டுமென எண்ணி "மாண்புக்குரிய தோழனே! உன் முகத்தில் மலர்ச்சி இல்லாமைக்குரிய காரணம் யாதோ" என்று கனிவோடு வினவுகிறான்.

"நலம் விழையும் நண்பா! நேற்று மாந்தோப்பு மங்கையொருத்தி வேல்விழியால் என் விலாப்புறத்தைக் கொத்திவிட்டாள்; செவ்விதழால் என்னுள்ளத்தைப் புண்ணாக்கிவிட்டாள்" என்றான் பெருமூச்சோடு!

தலைவனின் தவறான பேச்சுத் தோழனுக்குப் பிடிக்கவில்லை. இது நின்போன்ற ஆண்மை கொண்டவர்க்கு ஏற்றதல்ல! இது ஒழுக்கத்திற்கு இழுக்கு விளைவிக்கும் என இடித்துக் காட்டுகிறான்.

ஆனால் தலைவன், அவன் சொல்லினைச் சற்றும் பொருட்படுத்தாமல் மங்கையிடத்தில் மனதைக் கொடுத்துவிடுகிறான். தோழனும் தனியே சிந்திக்கிறான். தலைவன் துன்பத்தைப் போக்கவேண்டும்; அவன் மீண்டும் ஆற்றல் மிக்கவனாக உழைக்கவேண்டும். அதற்குத் தலைவியைச் சேர்த்து வைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்று உணர்கிறான். தலைவி வாழுமிடம், அவள் தன்மை, ஆகியவற்றைத் தலைவன் வாயிலாகக் கேட்டறிந்து, அவளையடைய வழி வகுக்கிறான். இத்தோடு மூன்றாம் காட்சி முடிவுறுகிறது.

இவ்வாறு தோழன் வாயிலாகவும் தோழி வாயிலாகவும் உரிய தலைவியைக்கண்டு களவியல் இன்பத்தை அடைகிறான். வருங்கால வாழ்வை எண்ணாமல் தலைவியும்

இன்பத்தோடுஇருந்துவிடுகிறாள். அவன் அவளைத் திருமணம் செய்யாமல் களவு முறையில் கண்டு செல்வது தோழிக்குப் பிடிக்கவில்லை. இருவரையும் பலர் காணும் மணமக்களாக மாற்ற வேண்டும். அதைக்கண்டு மகிழ வேண்டும். இதுவே அவள் வேட்கை!

ஒரு நாள் வேல்வீரன் அந்த வேல்விழியாளை இரவிலே காண வருகிறான். வந்தவனை வரவேற்காமல், "தலைவரே! தாங்கள் இவ்வாறு இரவில் வருவது எம் தலைவிக்கு வருத்தத்தை அளிக்கிறது; கடும் புலியும் கொடுங் களிறும் திரியும் இக் கானகத்தில் நீவிர் இரவில் வராமல் பகலில் வருவீராக" என்று கூறுகிறாள். தலைவனுக்கு ஏக்கமிருப்பினும் ஏந்திழையாளின் தோழி கூறுவதைத் தட்டக்கூடாதென விரும்பிப் பகலில் வருகிறான். அக்காலை அத்தோப்பில் மலர் கொய்வாரும் மாங்கனி பறிப்போரும் வருவதும் போவதுமாகஇருந்தனர். அன்புக்குரிய காதலியைக் கூடிப்பேச வாய்ப்புக் கிட்டவில்லை. எதிர்ப்பட்ட தோழியோ "என்றும்போல் இரவே வருக" என்று இயம்புகிறாள். நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த வீரனுக்குச் செய்தி புரிந்துவிட்டது. தலைவியை மறைமுகமாக காண்பதைக் காட்டிலும் மணம்செய்து நிரந்தரமாகக் காண்பதே நன்று என்று உணர்கிறான்.

சிந்தியாத தலைவிக்கோ தோழியின்செயல் சினத்தை உண்டாக்குகிறது. "இரவில் வந்தாரைப் பகலில் வா என்கிறாய். பகலில் வந்தாரை இரவில் வா என்கிறாய் நின் கருத்துத்தான் யாதோ" என்று ஆத்திரத்தோடு வினவுகிறாள். "அன்னாய் நின் நலன் பொருட்டு யான் நிகழ்த்திய சூழ்ச்சியாகும். விரைவில் நீ மணப்பெண்ணாக வேண்டும். இணையற்ற இல்லக்கிழத்தியாகத் திகழ வேண்டும். இதுதானம்மா யான் விழையும் எண்ணம்" என்று கனிவோடும் பணிவோடும் கூறிச் சினத்தை மாற்றுகிறாள்.

மாந்தோப்பு மங்கையை மணம் பேசத் தலைவன் சுற்றத்தாரோடு வருகிறான். அவர்களது களவு மணத்தை அறியாத பெற்றோர்கள் பெண் கொடுக்க மறுத்து விடுகின்றனர். உண்மையை உணர்த்துவதற்கு இருசாராருக்கும் துணிவு பிறக்கவில்லை. உள்ளத்தாலன்றி உருவத்தாலும் இணைந்த அந்தச் செம்மல்களைக் காண முடிவதில்லை. பொற்பும் கற்பும் வாய்ந்த எழிலரசியை என்ன நேரினும் வாழ்க்கைத் துணைவியாக்க வேண்டும். அதுதான் தமிழ்நெறி என்று தண்டமிழ் வீரன் உணர்கிறான். அதற்கு ஒரே வழி, யாரும் அறியாமல் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் சென்று, மணம் முடிப்பதே யாகும். இதனைத் தோழியிடமும் அறிவித்துச் செயல்படுகிறான்.

தலைவிக்கு நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. உடன் போவது ஒரு புறத்தில் அச்சத்தையும் மறுபுறத்தில் நாணத்தையும் கொடுக்கிறது. அச்சத்தையும் நாணத்தையும் எண்ணி உடன் செல்லாமல் விட்டுவிட்டால், இனித் தலைவனுடன் செல்லும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும்; அதனால் கற்பும் கெட்டுவிடும்; ஆகவே, அச்சத்தையும் நாணத்தையும்விடக் கற்பே சிறந்தது. அதைக் காப்பதே கன்னித் தமிழ்க் கன்னியரின் கடமையெனக் கருதி, தலைவனுடன் சென்றுவிடுகிறாள்.

பொழுதுபுலர்ந்தது; படுக்கையிலிருந்து வழக்கம்போல் செல்வியிடமிருந்து இசையொலி செவிலிக்குக் கேட்கவில்லை. ஏதேனும் உடலுக்கு ஊறு ஏற்பட்டுவிட்டதோ என எண்ணிப் படுக்கையைப் பார்க்கிறாள். ஆங்கு பண்புமிகு மகளைக் காணவில்லை. சின்னேரத்தில் இல்லத்தில் அவல நிலை ஏற்படுகிறது. காதலின் தன்மையை உணராமல், அவளை அவனுக்குக் கொடுக்காமல் விட்ட தன் தவறை அப்போதுதான் அறிகின்றனர். பெற்ற நற்றாய்க்கோ எல்லையில்லா மனக் குழப்பம் நேருகிறது. அவளது துன்பத்தைப் போக்கும் பொருட்டுச் செவிலி இணைந்த மணமக்களைத் தேடிப் புறப்படுகிறாள்.

காடுகளை வயல்களைக் கடந்து, வந்தாரையும், போவாரையும் வினவுகிறாள். ஒருவர்கூட வினாவுக்கேற்ற விடை கூறவில்லை. அதனால் அவள் நடை தளர்ந்து கண்ணொளி மங்கியது; சோர்வு மிகுதியாகியது. அதோ! அங்கொரு குழுவினர் வருகின்றனர். அவராவது நம் ஐயத்தைப் போக்குவாரென எண்ணிப் புறப்படுகிறாள். வந்தவர் அறுதொழில் கற்றவர் என்பதையும், மெய்ம்மை உணர்ந்தவர் என்பதையும் அறிந்து "ஐயன்மீரே! என் மகளொருத்தியும் பிறன் மகனொருவனும் இவ்வழியே சென்றதைக் காண்டிரோ என்று வினவுகிறாள். அவர்கள் அரும்பொருள் ஆயும் அறிவினராதலின் அவர் கூறும் விடை எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

அம்மணி! செல்வன் ஒருவனும் செல்வி ஒருத்தியும் இவ்வழி செல்வதைக் கண்டனம். நீவிர் அப்பெண்மணியின் தாயாரோ? என்று வினவினர்; ஆம்! என்றுரைத்த செவிலிக்கு. அம்மையே!

மலையிலே பிறந்த சந்தனமும் கடலிலே தோன்றிய முத்தும், யாழிலே பிறந்த இசையும் பிறந்தகத்திற்கு எவ்விதப் பயனும் அளிக்க இயலாமல் புகுந்த இடத்திற்கே பலன் அளிக்க வேண்டி உள்ளது. அதுதான் உலக இயற்கை அதனையே!

"பலவுறு நறுஞ்சாந்தம்
  படுபவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும்
  மலைக்கதைவதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள்
  நுமக்கும் மாங்கனையளே

சீர்கெழு வெண்முத்தம்
  அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும்
  நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள்
  நுமக்குமாங் கனையளே!

ஏழ்புணர் இன்னிசை
  முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும்
  யாழ்க்கவைதான் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள்
  நுமக்குமாங் கனையளே"

எனப் பண்ணிறைந்த தமிழால் அறைந்தனர். கேட்ட செவிலியும் அவர்தம் அறிவுரையை ஏற்று இல்லந் திரும்பினாள்!!

★

நற்குண நற்பண்புகளுக்கு மேன்மை எப்போதும் இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆனால், அந்த உணர்வுக்கேற்றபடி ஒழுங்காக நாம் நடந்துகொள்வதில்லை.

# இவர்கள் பேசினால்.....!

M. S. வெங்கடாசலம், M. A.

### பண்டித நேரு

துறவுக்கோலமாம்! காரணமெதுவும் கூறிடவில்லை அவர்! ஆனாலும் "துறவியாகப் போகிறேன் — அரசியல் வாழ்வினைத் துறந்திடப் போகிறேன் — புத்த பிட்சுவாகிவிட விரும்புகிறேன்" என்று தெரிவித்துவிட்டார்!

ஏன்? எதற்காக? இன்னமும் அவர் தெளிவாகச் சொல்லவில்லை!

நானும் தான் சொன்னேன், ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேனென்று! அதற்கான காரணத்தையும்குறிப்பால் உணர்த்தினேன். காங்கிரசுக்குள் ஊழல்கள் மலிந்துவிட்டன—உன்மத்தம் பிடித்தோர் பெருகிவிட்டனர் — பதவி வெறி வளர்ந்துவிட்டது — ஜாதியப் பித்து ஆழப் பதிந்துவிட்டது--என்றேன். இவ்வளவையும் சொல்லிவிட்டுத்தான், 'நிம்மதியில்லை—ஓய்வெடுத்தால்தான் பரவாயில்லை" என்றேன்! ஆனாலும் சில பத்திரிகைகள் நான் வெளிப்படையாகப் பேசவில்லை என்று குற்றம் சாட்டின! இதைவிட வெளிப்படையாகப் பேச என்ன இருந்தது? உத்தமர் காந்தி காங்கிரசைக் கலைத்துவிட வேண்டுமென்றார் — நான் அதைச் சொல்லவில்லை! ஆனால் காங்கிரசு காங்கிரசாக இல்லையென்று சொல்லிவிட்டேன் — ஒரு காங்கிரசுக்காரன் எப்படி இருக்கவேண்டும் என்று காந்தியார் வகுத்தாரோ, அந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்ற உண்மைக் காங்கிரசுக்காரர்கள் மிகக் குறைவு என்று சொன்னேன்! இதைவிடச் சொல்லவேண்டியதென்ன?

இந்த அளவுகூட வெளிப்படையாகப் பேசவில்லை பர்மாவின் பிரதமர் யூ நூ. நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்திலே வந்தது. எப்படியோ அவரது தலை தப்பியது. தலை தப்பிய பிறகு துறவியாகப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறார்!

> ஒரு வாரத்திற்கு முன்னால் பர்மிய பிரதமர் யூ நூ, தான் புத்த பிட்சுவாகிவிடப் போவதாக அறிவித்தார். அந்த அறிவிப்பை யாரார் எப்படி எடுத்துக்கொள்ளக் கூடும்என்று கற்பனைக் கண்கொண்டு கண்டு தீட்டப்பட்டதுதான் இந்தக் கட்டுரை.

ஏன்? எதனால்? விளக்கமில்லை! ஆனாலும் என்னைக்கண்டித்து எழுதிய பத்திரிகைகள், அவரை ஏன் கண்டித்து எழுதவில்லை? அல்லது நாட்டில் தனக்குச் செல்வாக்கு இல்லை என்று அவரே தீர்மானித்துவிட்டதாகப் பத்திரிகைகளெல்லாம் கருதுகின்றனவா? உலகத்தின் மற்ற நாடுகளிலுள்ள தலைவர்களுக்கு இதில் அக்கறையே காணோமே, ஏன்?

நான் ஓய்வெடுத்துக்கொள்ளுகிறேன் என்றதும், எவ்வளவு ஆர்வத்தோடு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த வெளிநாட்டுத் தலைவர்கள், பர்மாப் பிரதமரின் முடிவைப்பற்றி இன்னமும் வாய் திறக்கவில்லையே, ஏன்?

இதை முக்கியமாக நமது நாட்டு மக்களும், அரசியல் தலைவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும்! பாரதத்திற்கும் பர்மாவிற்குமுள்ள வேறுபாடு — இரண்டும் அகில உலக அரசியலில் பெற்றுள்ள செல்வாக்கின் தாரதம்மியம் வெளிப்படும்! பாரதத்தின் புகழ் நாளுக்கு நாள் பரவி வருகிறது என்று நான் கூறும்போது கேலியாகப் பேசியவர்கள் அனைவரும், இதை எண்ணிப்பார்க்க வேண்டும். நான் நாள்தோறும் எடுத்துரைக்கின்ற, பஞ்சசீலக் கொள்கையின் பெருமை—அதன் தேவை, அதை உலகிற்குப் போதித்ததால் பாரதம் அடைந்திருக்கிற மாண்பு, இத்தனையும் புலப்படும்.

மற்றொன்று; அது அவ்வளவு வெளிப்படையாகச் சொல்லப்பட வேண்டிய விஷயமல்ல! ஏனென்றால் வெளிப்படையாகச் சொல்லுவது, என் கருத்துப்படி, இராஜதந்திரமல்ல! இரு பொருள்படப் பேசுவதுதான் இராஜதந்திரமென்று நானே பாராளுமன்றத்தில் ஜனவரி மாதம் பேசியிருக்கிறேன்! ஆனாலும் என்ன செய்ய? உலகம் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒளிவு மறைவு இல்லாமல் சில சமயங்களிலாவது இருந்துதானே தீரவேண்டி இருக்கிறது?

யூநூ இங்கே வந்தபோது என்னை யோசனை கேட்டிருந்தால் கூட, நான். அந்த யோசனையை

ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லியிருந்திருப்பேன். ஆனால் பாவம் அவரென்ன செய்வார்? இப்போதுதான்—அதுவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்திற்கு வந்த பிறகு தான் — அந்த யோசனையே தோன்றியிருக்கக்கூடும்!

சரி, சரி! அதுவேறு விஷயம்! சொல்லவேண்டிய உண்மையை மறந்துவிட்டு, வேறெங்கோ சென்றுவிட்டேன்! வர வர எல்லா நிகழ்ச்சிகளிலும் பேசிப்பேசி எனக்கு இதே பழக்கமாகிவிட்டது! எழுத்தாளர் மாநாட்டுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் கல்கத்தாவுக்குப் போனபோது கூட இப்படித்தான், பேசவேண்டியதை மறந்துவிட்டு மொழிப் பிரச்சினையைப் பேசினேன்? எது நல்ல இலக்கியம்—எத்தகைய நூல்கள் நாட்டுக்குத் தேவை — என்பது தான் எழுத்தாளர்களுக்கு முக்கியம்! என்னவோ அவர்களெல்லாம் பேனா எடுத்துவைத்துக்கொண்டு, இலக்கிய சிருஷ்டிக்குத் தயாராகி விட்ட பிறகு, எந்த மொழியில் எழுதுவது என்று குழம்பிக் கிடப்பதைப் போல எண்ணிக்கொண்டு பேசிவிட்டு வந்தேன். இந்தத் தவறு அடிக்கடி ஏற்படுகிறது. என்ன செய்ய?

துறவியாகப் போகிறேன், என்று எந்த எண்ணத்தில் யூநூ சொன்னார்? அரசியலில் துறவுக் கோலம் பூண்டால் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டுவிடும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டார் என்றுதான் நான் நினைக்கிறேன்!

காந்தியடிகள் இருந்தார்—அவருக்குக் கடைசிவரை மதிப்பிருந்தது, மக்களிடம்! ஆனால் அந்த வாய்ப்பு, பெருமை எல்லோருக்கும் கிடைத்திடும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

இதையெல்லாம் புரிந்துகொள்ளாமலா, நான் இமயமலைச் சாரலிலே போய் ஓய்வெடுத்தபோது கூட என்னுடைய இலாகாப் பொறுப்பை யாரிடமும் ஒப்படைக்காமல் போனேன்? ஒரு வாரம் வெளிநாட்டுக்குச் சென்று வருவதானால்கூட, யாரிடமாவது என்னுடைய பொறுப்பை ஒப்படைத்துச் சென்று பழக்கப்படுத்தி விட்ட நான், இப்போது மட்டும் யாரிடமும் ஒப்படைக்கவில்லையே, ஏன்? இதிலிருந்தாவது புரிந்து கொள்ளவேண்டாமா, யூ நூ?

இவ்வளவு எச்சரிக்கையாக நான் நடந்துகொண்டும் என்ன ஆயிற்று? நான் ஒருவன் இன்னமும் இருக்கிறேன் என்பதையல்லவா இந்தப் பத்திரிகைகளெல்லாம் மறந்துவிட்டன! அதற்கு முன்னாலெல்லாம் நான் இருமினாலும், தும்மினாலும், கொட்டை எழுத்துக்களிலோ, அல்லது தனியாகக் கட்டம்கட்டியோ வெளியிட்டுக்கொண்டிருந்த பத்திரிகைகளெல்லாம், என்ன செய்தன என்று உலகத்திற்குத் தெரியாதா?

இப்படியிருக்க யூ நூ துறவியாவது எனக்கென்னவோ அவ்வளவு சரியானதாகப்படவில்லை. அதுவும் "துறவியாகிறேன்" என்று அவர் சொல்லி வாய் மூடுவதற்குள், பாஸ்வே கோஷ்டி இவரைக் கட்சியிலிருந்தே வெளியேற்றிவிட்டது! இப்போது இவர் துறவியானால் என்ன ஆகும்?

நான், இன்னமும் கட்சியில் செல்வாக்குப் பெற்றிருக்கிறேன்—நாட்டிலும் செல்வாக்கு இருக்கிறது. சமயம் கிடைத்தபோதெல்லாம், அமெரிக்காவில் எனக்குக் கிடைத்த அன்பான உபசாரத்தையும்—ரஷ்யாவிலே கிடைத்த வரவேற்பையும்--இங்கிலாந்து மக்கள் காட்டிய ஆர்வத்தையும் — நாசர் என்மீது பொழிந்த பாசத்தையும் அனுராதபுரத்தை ஐந்தாவது முறையாக என்னைத் திறக்கச் செய்த பண்டாரநாயகா காட்டிய பரிவையும்—இத்தனை தாரக மந்திரங்களையும் வைத்துக்கொண்டிருக்கிற என் கதியே இதுவானால், யூ நூவின் கதி என்ன ஆகும்?

மற்றொன்றுகூட அவருக்குப் புரிந்திருக்கக்கூடும்! நானில்லாத போது யார் யார் தங்களுடைய செல்வாக்கை எப்படியெப்படியெல்லாம் வளர்த்துக்கொண்டார்கள் என்று, அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளை நுணுகிப் பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்?

நான் அஞ்ஞாதவாசம் சென்றபோது பண்டித பந்த் தென்னிந்தியாவுக்குச் செல்லவேண்டிய காரணமென்ன? ஜனவரி 6ம் தேதி சென்னையில் எனக்குக் கிடைத்த 'வரவேற்பு' அவருக்கு நன்றாகத் தெரியுமே! என்னிடம் பற்றும் பாசமும் கொண்டவராக இருந்தால், கறுப்புக்கொடி காட்டியவர்களைக் காரசாரமாகக் கண்டித்திருக்க வேண்டாமா? வழவழா என்று, இந்திய ஒற்றுமையைப் பற்றிப் பேசிவிட்டு வந்தார்! "பண்டிட்ஜி! நீங்கள் போனீர்கள், கறுப்புக்கொடி காட்டினார்கள்! ஆனால் எனக்குக் காட்டவில்லை, பார்த்தீர்களா" என்று நாளைக்கு அவர் கேலியும் கிண்டலும் கலந்த தொனியில் பேசக்கூடுமே? நேரிடையாக யாராலும் எதிர்க்கப்படாத என் கதியே இப்படியென்றால், ஆட்சியிலிருக்கும்போதே கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கின்ற யூ நூவின் கதி?

## யூ நூ

"துறவியாகிவிடப் போகிறேன்" என்றேன்! ஏன் சொன்னேன்? எனக்கே தெரியாது!

இதை 'ஸ்டண்ட்' என்று சிலர் கருதக்கூடும்! கருதுகிறார்கள் என்று நான் எண்ணவில்லை—கருதக்கூடும் என்று யூகிக்கிறேன் அப்படி யூகிப்பதற்குக் காரணம், பண்டித நேருவுக்கு ஏற்பட்ட கதியை நினைத்துத்தான். அவர் தான் அரசியலிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ளப்போவதாக அறிவித்தவுடன், அதை அரசியல் 'ஸ்டன்ட்' என்று எந்தப் பத்திரிகையும் எழுதவில்லை? ஆனால் இத்தகைய அறிவிப்பை அவர் இதற்கு முன்னால் கூட வெளியிட்டிருந்த காரணத்தால், அதை 'ஸ்டன்ட்' என்று எல்லோராலும் புரிந்துகொள்ள முடிந்தது! ஆனால் நான் அப்படியல்லவே! "விலகிக்கொள்ளுகிறேன்" என்று இதற்கு முன்னால் எப்போதும் சொன்னதில்லை. அப்படியிருக்க, என்னுடைய அறிவிப்பை 'ஸ்டன்ட்' என்று ஏன் எடுத்துக் கொள்ளப்போகிறார்கள்!

நேருவின் அறிவிப்பைப்பற்றி அவ்வளவு பத்திரிகைகள் வெளிப்படையாக எழுதியும், அமெரிக்க ஜனாதிபதி சும்மா இருந்தாரா? "வில்காதீர்கள்" என்றல்லவா விண்ணப்பம் விடுத்தார்! காரணம் என்ன? அமெரிக்க நாட்டு மூலதனம் அளவுக்கு மீறி இந்தி

மாவில் முடங்கிக்கிடக்கிறது! அதனால், நேருவுக்குப் பிறகு வருகிற ஆட்சி அவர்களுக்குப் பாதகமாக நடந்துகொண்டால் என்ன செய்வது என்ற பயம்!

ஆனால் அதே ஐசன்ஹோவர், என்னுடைய அறிவிப்பைப்பற்றி இன்னமும் வாய்திறக்கவில்லையே, ஏன்? எங்கள் நாடு அமெரிக்க மூலதனமென்றாலேவெறுக்கின்ற-மருட்சியடைகின்ற நாடு. எங்கள் நாட்டு வளத்தைப் பெருக்க—மக்களது வாழ்வை உயர்த்த—நாங்கள் மற்ற நாடுகளின் உதவிக்காகக் கையேந்தி ஏங்கிக் கிடக்கவில்லை. அப்படி வாங்கியிருந்தாலல்லவா அவர்கள், நான் பதவியிலே இருக்க வேண்டுமா அல்லது என்னை எதிர்க்கின்ற பா ஸ்வே (Ba Swe) ஆட்சியிலே இருக்கவேண்டுமா— இரண்டில் எது இலாபகரமானது — என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவர்?

பண்டித நேரு பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவித்தற்கும், நான் துறவியாகிவிடப்போவதாக அறிவிப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. அவருக்கு இருக்கின்ற தொல்லைகள் ஏராளம்! 'இருக்கின்ற' என்று சொல்லுவதைவிட 'அவராக ஏற்றிவைத்துக்கொண்ட' என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

அவர் ஆளுகிற நாடு மிகப் பெரியது — பரந்தது—பல்வேறு மக்கள் தொகையைக்கொண்டது —பல்வேறு மொழிகளைக்கொண்டது. ஆங்கிலேயர் வருவதற்கு முன், என்றுமே ஒன்றாக இல்லாத நாடு அது! அதனை ஒன்றாக்கி ஆள்வதென்பது சாதாரண விஷயமல்ல! அதை அவர் புரிந்து கொள்ளாததுதான், அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் அனைத்திற்கும் அடிப்படையான காரணம்!

ஆனால் என் நிலை அப்படியல்ல! பர்மாவின் அமைப்பும் பாரதத்தைப் போன்றதல்ல! இப்போது ஏற்பட்டிருக்கிற அரசியல் குழப்பத்திற்கு முக்கிய காரணம் தனிப்பட்டோரது ஆசைகளும் பதவிப் பித்தும்தான்!

பண்டித நேருவின் கட்சியில் பல கோஷ்டிகள் இருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்துகொண்டேன். ஆனால் நானிருக்கின்ற கட்சி, பல கட்சிகளின் கூட்டணி — ஒரு கட்சியல்ல! அதனாலே எங்களுக்குள் பிளவு ஏற்படுவது ஆச்சரியம் விளைவிக்கின்ற ஒன்றல்ல!

கம்யூனிஸ்டுகளை முறியடிப்பதற்கு, பா ஸ்வே என்பவரையும் நீன் என்பவரையும் வளர்த்தேன். அவர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தேன — அரசியல் தலைவர்களாக்கினேன். வளர்த்த கடா மார்பில் பாய்வதைப்போல், அவர்கள் என்மீதே பாய்ந்துவிட்டார்கள் — என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள்.

அவர்கள் பாராளுமன்றத்தில் எனக்கெதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நான் வெற்றி பெற்ற காரணத்தால், இனி எந்தப் பயமும் எனக்கில்லை என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு, செல்வாக்கு இருக்கும்போதே துறவறம் பூணுவதுதான் நல்லது என்ற கருத்தில், புத்த பிட்சுவாகிவிடத் தீர்மானித்ததாக அறிவித்தேன்!

ஆனால் இப்போது என்ன செய்ய? இருதலைக்கொள்ளி எறும்பாகிவிட்டேன். உலகத்துக்கு நான் அறிவித்தபடி துறவியாகிவிட்டால் அரசியலைக் கண்டு அஞ்சி ஓடிவிட்டேன் என்று நாளைக்கு உலகம் சொல்லக்கூடும்! அப்படியொரு பெயர் — எனது அரசியல் வாழ்வில் அழித்திடப்பட முடியாத கரை ஏற்படக் கூடாதே என்று கருதி, துறவியாகின்ற எண்ணத்தைத் துறந்துவிட்டால், நானும், பண்டித நேருவைப்போல் 'ஸ்டன்ட்' அடிப்பதாக உலகம் கருதிக்கொண்டால்? காலமே! என்ன செய்யவேண்டும் என்று வழிகாட்டும் பொறுப்பை உன்கரத்திலேயே விட்டுவிடுகின்றேன்!

## பா ஸ்வே

உலகம் போற்றட்டும் அல்லது புழுதிவாரித் தூற்றட்டும்-அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை! எனக்கிருக்கிற கவலையெல்லாம், கம்யூனிஸ்டுகளை நேற்றுவரை எதிர்த்து வந்த என் தலைவர்—இல்லை, நேற்றுவரை எனக்குத் தலைவராக இருந்தவர் — இன்று எப்படி அவர்கள் பக்கம் சேரலாம்? தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அவர்கள் உதவியை நாடுகிறார் என்றால், தான் இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையைக்கைகழுவி விட்டுவிட்டார் என்பதைத் தவிர வேறென்ன?

பாசிச எதிர்ப்பு மக்கள் உரிமை அணியிலிருந்து கம்யூனிஸ்டுகள் 1946ல் வெளியேறினார்கள். வெளியேறிய பிறகு அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுத்த தொல்லைகள் எவ்வளவு! அரசாங்கத்தின் பணம் கொள்ளை கொள்ளையாகச் செலவிடப்பட்டல்லவா, அவர்களது ஆணவமும் அட்டகாசமும் அடக்கப் பட்டிருக்கிறது!

அதே கம்யூனிஸ்டுகள்தான், நமது அணியிலிருந்து வெளியேறிய இரண்டு ஆண்டுகளில், நமது பழைய பிரதமர் அவுங் சான் என்பவரையும் மற்றும் பலரையும் சுட்டுக் கொன்றார்கள். அவர்களோடு இன்று யூ நூ கைகுலுக்குகிறார்—எங்களையெல்லாம் உதறித் தள்ளுகிறார் என்றால் என்ன அர்த்தம்?

கம்யூனிஸ்டுகளோடு கைகுலுக்கிக் கொள்வதோடு நிறுத்திக் கொண்டாலும் பரவாயில்லை. அமெரிக்காவிலிருந்து எந்த உதவியும் தேவையில்லை என்று, இறுமாப்போடல்லவா நாட்டை நடத்திச்செல்லுகிறார்? ஐந்தாண்டுத் திட்டத்தைக்காட்டி, பாரதம், அமெரிக்காவிடமிருந்து, எப்படியெப்படியோ பணம் பெறுகிறதே! அப்படி இவரும் கடன் வாங்கி, அல்லது உதவிகளைப் பெற்று நாட்டை ஏன வளப்படுத்தக் கூடாது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏன் உயர்த்தக்கூடாது?

“பாரதம் ரஷ்யாவின் பக்கமுமில்லை—அமெரிக்காவின் பக்கமுமில்லை--நியாயத்தின் பக்கம்தான்” என்று பண்டித நேரு அடிக்கடி சொல்லிவருகிறாரே, அந்தப் பாதையை யூ நூ ஏன் கடைபிடிக்கக்கூடாது? ஏதாவது ஒரு பக்கம் சேர்ந்துவிடுவதாலே ஏற்படுகிற பயன் என்ன?

இவ்வளவையும் எண்ணிப்பார்க்காமல் நாட்டை நடத்திச் செல்வதால் ஏற்படவிருக்கின்ற அபாயங்களை எண்ணினேன். அதனாலே

கட்சியிலிருந்து அவரை வெளியேற்றினேன்! இப்படி நடக்கும் என்றுதெரிந்துதானோஎன்னவோ வெளியேற்றப்படுவதற்கு முன்னால் "துறவியாகிவிடுகிறேன்" என்று அவர் அறிவித்துவிட்டிருந்தார். இத்தனை வருட அனுபவம், இவருக்கு இந்த முன் யோசனையைக்கூடத் தராமலிருந்தால் நான் வருத்தப்பட்டிருப்பேன். இப்போது மகிழ்ச்சியடைகிறேன்! எங்களுக்குள்ளே எவ்வளவு பேதா பேதங்களிருந்தாலும், என் தலைவர் இவ்வளவு முன்யோசனையோடு, தீர்க்க தரிசனத்தோடு நடந்துகொள்ளும் திறமை வாய்ந்தவர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது எனக்கு மகிழ்ச்சி பிறக்காமலா போகும்? ஆனால் நான் — அவருடைய அறிவைக் கண்டு பாராட்டுகின்ற-பெருமைப்படுகின்ற நான் — அவர் சொன்ன சொல் தவறாதவர் என்று உலகம் அவரை எண்ணும்படி நடந்துகொள்ள வேண்டுமென்று மனதார விரும்புகின்றேன்.

❋

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒற்றுமை உபதேசம் செய்வார்—நடந்த சம்பவங்களுக்கு ஏதாவது ஒரு நொண்டிச் சமாதானம் சொல்வார்—எல்லாச் சம்பவங்களுக்கும் பெடரல் கட்சியினரே காரணம் என்று பாய்வார்.

கடந்தமாதம், பெருத்த அளவில், இலங்கைத்தீவு முழுவதுமே இந்த: முறை கையாளப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற சிலசம்பவங்களைத் தவிர, சிங்களவர்கள் வாழுமிடங்களிலெல்லாம் காலிகளையும் கூலிகளையும் வைத்துக்கொண்டு தமிழர்கள்மீது நடாத்தப்பட்ட அக்கிரமங்களைப்பற்றி அரசாங்கம் விடுத்த அறிக்கைகள் எதிலும் ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை. ஆனால், தமிழர்கள் வசிக்கும் இடங்களில் ஒரு சிலர் ஈடுபட்ட செயல்கள் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டு, தமிழர்கள் வசிக்கும் பகுதிகளிலேயெல்லாம் இராணுவம் கொண்டுவந்து குவிக்கப்பட்டது; பெடரல் கட்சித் தலைவர்கள் எல்லாரும் கைதுசெய்யப்பட்டார்கள். சிங்கள வெறியர்கள், சர்க்கார்—பிரதமர் ஆகியோரின் பிடியிலேயே உள்ளனர்.

திரு. சின்னதுரை (பி.எஸ்.பி.), திரு. ராஜாராம் நாயுடு (காங்கிரஸ்) ஆகியோர், எதிர்க்கட்சியினரைத் தாக்க வேண்டும் என்பதற்காக, இலங்கைவாழ் தமிழர்களைப்பற்றி அநாவசியமாகத் தங்களது பேச்சில் இழுத்திருக்கின்றனர். எந்த உண்மையை வைத்து அப்படிப் பேசினார்களோ தெரியவில்லை! இதுபோன்ற பேச்சுகள் மூலம், இலங்கைவாழ் தமிழர்களுக்கு பெருத்த தீங்கும் சிக்கலும் உண்டுபண்ணியுள்ளார்கள்.

சி. எச். முத்து,
இலங்கை.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஒருவர்! இன்னொருவரோ, அரசியல் கட்சி ஒன்றின் முன்னணியில் நிற்பவர்! தோழர் ராஜாராமும், சின்னதுரையும், இலங்கைத் தமிழர்கள் பற்றி வெளியிட்ட கருத்துக்கள், அங்கு வாழ்வோரின் மனதை எந்தளவுக்குப் புண்படுத்தியுள்ளன என்பதைக் கடிதம் உணர்த்தும்.

சின்னதுரையைவிட ராஜாராம் அவர்களுக்குப் பொறுப்பு அதிகம். ஆளும் கட்சியின், தமிழ் நாட்டுப் பிரிவுக்குத் தலைவர் அவர். அப்படிப்பட்டவர், "இலங்கைப் பிரச்னைக்குக் காரணம் அங்குள்ள தமிழர்கள்தான்" என்று தமிழ் மக்களையே குற்றம் சாட்டிப் பேசினதாக, ஏடுகளில் கண்ணுற்றோம்.

இலங்கையில், தமிழன் துயர் பெரிது! இதனைத் தமிழர்கள் கொடுத்துள்ள உயிர்ப்பலி விளக்கும்!

நம்மோடு இருக்கவேண்டியவன்—நமது இனத்தான், நமது சகோதரன், அங்கே சாகும்போது, இங்கேயுள்ள இவர், பிரச்னை தீர ஆவன செய்திருக்க வேண்டும்; இன்றேல் அனுதாபமாவது காட்டியிருக்க வேண்டும்; அதைவிடுத்து, அவர்கள்மீதே குற்றம் சுமத்துவதென்றால், கொடுமை என்போம்.

இங்குள்ள சிலர் பேசுவதைக் கேட்டு, இலங்கைவாழ் தமிழர்கள் நடந்துகொண்டதன் விளைவாகத்தான், அங்கே இப்படியெல்லாம் நடக்கிறதாம்!—சொல்லியிருக்கிறார், ராஜாராம்.

தீ எரியும்போது அது அடங்கும் விதத்தில் முயற்சிகள் எடுப்பதுதான் நல்ல செயலாகும். அதைவிடுத்து, இப்படி இவர்கள் பேசுவது, வேதனையானது மட்டுமல்ல; இதுபோன்ற விஷயங்களில், ஏனிப்படி இருக்கிறார்கள் என்கிற ஐயத்தையும் கிளப்பிவிடுகிறது. உண்மையில், வருந்துகிறோம்.

ஆ. ர்.


# தூத்துக்குடி தேர்தல்

## இருப்பது கொஞ்சநாட்களே!

### தோழர்காள்!
### கழகங்காள்!!

கையில் கிடைத்ததை ஒவ்வொருவரும் உடன் அனுப்பியுதவுங்கள், அறிவகத்துக்கு.

அவசரப்பணி! காசுகள் தேவை!